1924-25

ரக்தாக்ஷி ~~19[illegible]~~ 1924 [illegible]

[illegible] - 15 [illegible]


JL
R65 m211, N11VD.
M24·15·3
186746

1764

Regd: No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷிஸ்ரீ,
1924—1925.
ஸம்புடம் 15.



மார்கழிமீ.
DECEMBER.
ஸஞ்சிகை 3.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 DEC 1924

பத்ராதிபர். }
கார்யதர்சி. } ஈ. ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்,ஏ.

விஷய ஸூசிகை.



1. சிராத்தம்:— பத்ராதிபர். 49
2. முதலாழ்வார்கள்:— ஸ்ரீ. உப. சோ. ஸ்ரீநிவாஸ அய்யங்கார். 56
3. ஸதாசார்யனை அடைந்த ஸச்சிஷ்யன்:—
ஸ்ரீ. உப. வே. ரகுநாதாசார்யர். 58
4. ப்ரபத்தி:— ஸ்ரீ. உப. வே. ஸ்ரீசைல தாதாசார்யர். 61
5. திருவாய்மொழியின் பெருமை:—
ஸ்ரீ. உப. வே. கே. ராஜகோபாலாசார்யர், B. A. B. L. 66
6. ப்ராணாயாமம்:— ஸ்ரீ. உப. வே. வெ. க்ருஷ்மாசார்யர். 69
7. சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த சபையின் பதினான்காவது
வருஷாந்திய அறிக்கை:— 1
8. சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, பதினான்காவது
வார்ஷிக மஹாஸங்கத்திய தினசரிக்ரமங்கள்:— 7
9. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழி பெயர்ப்புடன்:—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 89


K. R. Press, Madras.

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.

உலக ப்ரசித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலை, | ரூ. 3.



ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

---

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் மூலமும், தமிழ்மொழி பெயர்ப்பும்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த இந்த அத்யத்புதமான நாடகம் ஸம்ஸ்க்ருதத்தில் இருப்பதினால் அனைவருக்கும் ப்ரயோஜனப்படவில்லையே என்பதைக்கருதி ஷை க்ரந்தத்திற்கு திருவஹீந்திரபுரம் வித்வான் பகவத்விஷயம் பண்டிதபூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியால் எழுதப்பட்ட ஸரியான தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்டிருக்கிறது. டிம்மி சைஸ் 680-பக்கம் கொண்டது.பைண்டுபுஸ்தகம் விலை ருபா 4—8—0. தபாற்கூலிவேறு 0—8—0.

விலாசம்:— மானேஜர், நிகமபரிமளம் ஆபீஸ், ஸ்ரீசடகோப நிலையம்,

மௌண்ட் ரோட், சென்னை.

P. R. S. பட்டாசார்யாரின்

பரத்வாஜ சந்தனதிகிருதம் அல்லது

நீர்ரோக நிவாரண நெய்.—இது மூத்திர கோசங்களி லுண்டாகும் விரணங்கள், கெனேரியா வென்னும் வெள்ளை நோய் முதலிய வியாதிகளால் கஷ்டப்படும் ஸ்திரீ புருஷர்கள் இருபாலருக்கும் கைகண்ட மருந்தாகும். நீரடைப்பு முதலியதை வெகுசீக்கிரத்தில் நிருத்துவதில் நிகரற்றது.

விலை 8 அவு - புட்டி 1 - க்கு ருபாய் ... 2—0—0

தபால் செலவு வேறு. காட்லாக் வேண்டுபவருக்கு இனமாய் அனுப்பப்படும்.

பரத்வாஜ ஆச்ரமம்,

பெருமாள் கோவில் வீதி, எழும்பூர், சென்னை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினொன்காவது வார்ஷிக மஹாஸங்கம்.

விஜ்ஞாபனம்,

திருப்பல்லாண்டு விளைந்த திருப்பதியாகிய மதுரையிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆஹ்வாநத்தின் பேரில் மதிராஸ் ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த ஸபையின் பதினொன்காவது வார்ஷிக மஹாஸங்கம் நாளது ரக்தாக்ஷி வருஷம் மார்கழிமீ 15, 16, 17வ-களில் (டிசம்பர்மீ 29, 30, 31,) மதுரையில் ஸேதுபதி ஹைஸ்கூலில் ஸ்ரீ பகவத் க்ருபையை முன்னிட்டு நடைபெறுகின்றது. அப்பொழுது கனம் ஜஸ்டில் ஸ்ரீ. உ. வே. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி B. A. B. L., அக்ராஸநாதிபத்யத்தை வஹிப்பதாக க்ருபையுடன் திருவுள்ளம்பற்றி இருக்கிறார். அநேக பரிகணிதர்களான வைதிக வித்வான்களும் லௌகிக ப்ரமுகர்களும் நமது வேதாந்த விஷயமாக உபந்யாஸங்களைச் செய்ய அங்கீகரித்திருக்கிறார்கள். சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வர்ஷாந்த கார்யக்கூட்டமும் இரண்டாவது தினமாகிய மார்கழிமீ 16வ (30-12-24) செவ்வாய்க்கிழமையன்று நடைபெறும். தேவரீர் அந்த மூன்று தினங்களிலும் அவ்விடத்திற்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்கவேணுமென்று ஸ்வினயம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸதஸ்ஸில் நடக்கப்போகும் உபந்யாஸங்களின் தினசரிக்ரமம் மார்கழிமீ த்திய தீபிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

V. பாஷ்யமய்யங்கார் B. A. B. L.,
ஸத்காரஸபை அத்யக்ஷர்.

K. ராமய்யங்கார் B. A. B. L.,
கார்யநிர்வாஹ ஸபை அத்யக்ஷர்.

R. நரஸிம்மய்யங்கார்,

R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

A. அரங்கராமாநுஜ தாஸர்,
ஸத்காரஸபை கார்யதர்சிகள்.

S. ராஜகோபாலாசார்யர் B. A,
திவான்பஹதூர் T. நம்பெருமாள் செட்டியார் B. A.,
T. கோதண்டராம அய்யங்கார், M. A. M. L.,
A. V. கோபலாசார்யர் M. A. B. L.,
ஸபையின் அத்யக்ஷ ப்ரதிநிதிகள்.

S. கோபாலஸ்வாமி அய்யங்கார் [B. A. B. L.,

R. ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் M. A.,
கார்யதர்சிகள்.

186746.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ ஐய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 15.] ரக்தாக்ஷி ௵, மார்கழி ௴. [ஸஞ்சிகை 3.

"த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா॥

ஸ்ரீபாகவதம். 1-9-23.

ஸ்ரீ:

## ச்ராத்தம்.

ஸ்ரீ. உ. வே. காடந்தேத்தி கோபாலாசார்ய ஸ்வாமியால் 14-வது ஸம்புடம் 8, 9, 11, 12 ம் ஸஞ்சிகைகளில் எழுதப்பட்ட ச்ராத்தம் என்னும் வ்யாஸத்துடன் சில அம்சங்கள் சேர்க்கப்பட்டால் அவை நம் தீபிகாபிமானிகளுக்கு உபயோகமாகும் என்று நினைத்து இங்கு அவற்றை விவரிக்கிறோம்.

முதலில் ச்ராத்தம் உண்டானவிதம் எப்படி என்று அறிந்துகொள்வது அவச்யம். அது ஸ்ரீமன் மஹாபாரதத்தில் அநுசாஸனபர்வத்தில் 138-வது அத்யாயத்தில் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எப்படி என்னில்:—

ப்ருஹ்மாவிடமிருந்து அத்ரி என்னும் ஒரு மஹர்ஷி உண்டானர். அந்த மஹர்ஷிக்குத் தத்தாத்ரேயர் என்னும் ஒருபிள்ளை பிறந்தார். அவருக்கு நிமி என்னும் ஒருபுத்ரனுண்டானர். அவர் மிகவும் தபஸ்வி. அவருக்கு ஸ்ரீமான் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அவன் மஹா தபஸ்வியாயிருந்து ஒரு ஆயிரம்வருஷம் தபஸ் செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் அவனுடைய காலமாய்விட்டது. நிமி புத்ரசோகத்தால் மனவருத்தமுற்று மிகவும் வருந்தி அவனுடைய சரீரத்தை ஸம்ஸ்காரம்செய்து தனக்கு நேர்ந்த ஆபத்தை நினைத்து வருந்திக்கொண்டிருந்தார். சதுர்த்தசியன்று அநேக த்ரவ்யங்களைச் சேர்த்து அன்று ராத்திரி துக்கப்பட்டே நித்ரையை அடைந்தார். விடியற்காலத்தில் எழுந்து என்ன

செய்கிறது என்று யோசிக்கத்தொடங்கினர். அப்பொழுது அவர் மனதில், சில ப்ராஹ்மணர்களை அழைத்து, போஜனம் செய்வித்தால் தன் பிள்ளையின் ஆத்மாவுக்குத் த்ருப்தி உண்டாகும் என்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதை யோஜித்துப்பார்க்க மிகவும் சரி என்று அவர் மனதில் பட்டது. பொழுது விடிந்ததும் அமாவாஸ்யை அன்று தன் பிள்ளைக்கு எந்த எந்தப் பதார்த்தங்களிலிஷ்டமோ அவை அவ்வளவையும் சேகரித்து அவைகளை அவனுக்கு இஷ்டமானபடி பாகம் செய்வித்து, ஏழு ப்ராஹ்மணர்களை அழைத்து, அவர்களுக்கு அர்க்ய பாத்யாசமனீயம் கொடுத்து தர்ப்பாஸனத்தில் அவர்களை உட்காரவைத்து, ச்யாமாகான்னத்தையும் இன்னும் ஸித்தம் பண்ணி வைத்த எல்லா பதார்த்தங்களையும் உப்பு இல்லாமல் போஜன பாத்ரத்தில் பரிமாறி அமுது செய்வித்து, அவர்களுக்குப் பக்கத்தில் தர்ப்பத்தைத் தெற்கு நுனியாகவைத்து அதன்மேல் (தன்பிள்ளையின்கோத்ரத்தையும்பெயரையும்சொல்லி) அன்னத்தால் செய்தபிண்டங்களைவைத்துதத்தம் செய்தார். எல்லாம் முடிந்து ப்ராஹ்மணர்களும் அவரவர்கள் க்ருஹங்களுக்குப் போனபிறகு நிமிக்கு இதுவரை ஒருவராலும் அனுஷ்டிக்கப்படாத கார்யத்தைச் செய்தோமே, அது சரியாகுமோ ஆகாதோ என்று பச்சாத்தாபமும், ருஷிகள் இதைக்கண்டு தன்னைச் சபித்துவிட்டால் என்னசெய்கிறது என்று பயமுண்டாயிற்று. இந்தத் துக்கத்தால் மிகவும் வருத்தமுற்று, தன்வம்ச கூடஸ்தரான அத்ரிமஹர்ஷியை த்யானம்செய்தார். இந்த வர்த்தத்தை அறிந்த அத்ரிமஹர்ஷியும் உடனே நிமி முன் வந்து ப்ரத்யக்ஷமாகி, புத்ரசோகத்தால் வருந்தும் நிமிக்கு ஸமாதானம் பண்ணி ஆதரவாக வார்த்தைகளைச் சொல்லி, உன் மனதில் தோன்றி, பிறகு நீ அனுஷ்டித்த கர்மாவானது பித்ருக்களுக்குச் செய்த யாகம்; நீ பயப்படாதே, நீ தபோதனன் அல்லவா, இறந்துபோனவர்களுக்கு இவ்விதம் கர்மா செய்யவேண்டுமென்று ப்ருஹ்மாவாலேயே வெகு காலத்துக்கு முன் ஸங்கல்பிக்கப்பட்டிருந்தது. நீ செய்த காரியம் ப்ருஹ்மாவால் முன்னமே ஸங்கல்ப்பிக்கப்பட்டதுதான்; உன் தபோபலத்தால் உன் மனதில் தோன்றும்படி அவர் அநுக்ரஹித்தார்; ஆகையால் நீ செய்தாய்; ப்ருஹ்மாவைத் தவிர எவர் இந்தக் கர்மாவை ஏற்படுத்த முடியும். ச்ரத்தையுடன் செய்கிற கர்மாவானதால் இதற்கு ச்ராத்தம் என்று பெயர் என்று சொல்லி, பிறகு அவருக்கு ச்ராத்தம் செய்யும் ப்ரகாரத்தை விஸ்தாரமாய் உபதேசித்துவிட்டு ப்ருஹ்மலோகம் போய்ச் சேர்ந்தார். பிறகு நிமி அதேமாதிரி அனுஷ்டிக்க ஆரம்பித்தார். இவரைப் பார்த்து மற்ற எல்லா ருஷிகளும் செய்யத்தொடங்கினர்கள். அதுமுதல் ச்ராத்தம் உலகத்தில் செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

பிறகு, பித்ருக்கள் என்பவர்கள் எவர்கள்? ஏன் அவர்களுக்கு அந்தப் பெயர் வந்தது? என்று விசாரிப்போம். முன் ஒருகாலத்தில் ப்ருஹ்மா தேவர்களை ஸ்ருஷ்டித்து நீங்கள் என்னை யஜ்ஞங்களால் ஆராதித்து வாருங்களென்று கட்டளையிட்டார். இவர்கள் ப்ருஹ்மா கட்டளையிட்டபடி செய்யாமல் தங்களுடைய இந்திரியங்களை த்ருப்தி செய்துகொண்டு காமபரவசர்களாகி ஜ்ஞான சூன்யர்களாய்விட்டார்கள். இவர்களுடைய நடத்தையைப் பார்த்து ப்ருஹ்மாவும் ஜ்ஞானமில்லாமல் போகக்கடவீர்களென்று சபித்துவிட்டார். அவர்களிருந்த லோகமும் இவர்களைப்போல் ஜ்ஞானமில்லாமல் ஆகிவிட்டது. இந்தத் தேவர்கள் பிறகு வெட்கத்துடன் ப்ருஹ்மாவைச் சரணாகதி செய்தார்கள். அவர் நீங்கள் சரியான நடத்தை யில்லாதவர்களாயிருந்ததால் தபோதனர்களான உங்களுடைய பிள்ளைகளிடம்போய் ப்ராயச்சித்தம் செய்து ஜ்ஞானோபதேசம் செய்துகொள்ளுங்கள் என்று உத்தரவுசெய்தார். தேவர்களும் அப்படியே அவர்களுடைய பிள்ளைகளை ப்ராயச்சித்தம் செய்யும்படி வேண்டிக்கொள்ள அவர்கள் தங்களுடைய தகப்பனர்களான தேவர்களுக்கு ப்ராயச்சித்தமும் ஜ்ஞானோபதேசமும் செய்து, பிள்ளைகளே போங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். தேவர்கள், தங்களுடைய பிள்ளைகள் தங்களை புத்திரர்கள் என்று சொன்னதால் கோபங்கொண்டவர்களாய் ப்ருஹ்மாவிடம் முறையிட, அவரும் அவர்கள் செய்ததும் சரிதான். நீங்கள் அவர்களுடைய சரீரத்தை உண்டாக்கினீர்கள். அதனுல் நீங்கள் அவர்களுக்கு பிதா. அவர்கள் உங்களுக்கு ஜ்ஞானத்தைக் கொடுத்ததால் அவர்கள் உங்களுக்கு பிதா. ஆகையால் அவர்கள் சொன்னது சரிதான் என்றும், இதுமுதல் அவர்கள் ஜ்ஞானத்தால் உங்களுக்குப் பிதாவானதால் அவர்கள் பித்ருக்கள் என்று வழங்கப்படட்டும், நீங்கள் தேவர்களென்று வழங்கப்படுவீர்களென்றும் ஆஜ்ஞையிட்டார். அது முதல் அவர்கள் பித்ருக்களானுர்கள்.

இந்தப் பித்ருக்கள் ஏழுகணங்கள் அல்லது ஸமூஹங்கள். அவர்களில் நான்கு கணத்தார் உருவை உடையவர்கள். மூன்று கணங்கள் மூர்த்தி இல்லாதவர்கள். ஸுகாலர்கள், ஆங்கிரஸர்கள், ஸுஸ்வதர்கள், ஸோமபர்கள் என்று நாலு கணத்தார்களும் மூர்த்தியை உடையவர்கள். இவர்கள் கர்மத்தால் பிறந்தவர்கள். வைராஜர்கள், அக்னிஷ்வாத்தர்கள், பர்ஹிஷதர்கள் என்று மூன்று கணத்தார் மூர்த்தி இல்லாதவர்கள். தங்களுடைய தர்மபூத ஜ்ஞானத்தால் விபுவாயுமிருப்பார்கள். அணுவிலேயும் ப்ரவேசிக்கச் சக்தி உள்ளவர்கள். தங்களுக்கு இஷ்டமான ரூபங்களை எடுத்துக்கொண்டு ஸஞ்சரிக்கிறவர்கள். இவர்கள் வஸிக்குமிடம் ஸநாதன லோகம் என்றுபெயர். அதற்குப் பித்ரு லோகம் என்றும் பெயர். இவர்களுக்குப் பித்ருகணங்கள் என்று பெயர்.

நம்மால், நம்முடைய இறந்துபோன பிதா, பாட்டன், ப்ரபிதாமகன் முதலானவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஹவிஸ்ஸு எப்படி அவர்களுக்குப்போய்ச்சேருகிறது? என்றுல் இறந்துபோன பந்துக்களுக்கு நேராகப்போவதில்லை. அவைகள் பித்ருக்களுக்குப்போகின்றன. அவர்கள் தங்களுடைய யோகபலத்தால் பூர்

புவஸ்ஸுவ: என்னும் பெயருள்ள மூன்று லோகங்களிலிருக்கும் தேவ கந்தர்வ மனுஷ்யர்கள் முதலிய எல்லாப்பூதங்களுக்கும் அவர்கள் எவ்விடத்திலும் எந்த ரூபத்திலிருந்தாலும் அவர்களுக்குச் சேரும்படி செய்கிறார்கள். பீஷ்மர் அவருடைய தகப்பனாருடைய ச்ராத்தம் செய்து பிண்டதானம் செய்யும்போது பூமியைப்பிளந்துகொண்டு ஒருகை வெளியில் வந்து பிண்டத்தைக்கொடு என்று கேட்டது. அதில் அநேக ஆபரணங்களும் கேயூரங்களும் அணியப்பட்டிருந்தன. அந்தக்கை அவருடைய தகப்பனாருடையது. அவர் செத்துப்போவதற்கு முன்னிருந்ததுபோலவே இருந்தது. பீஷ்மரும் இந்தக் கல்பத்தில் பிதா கையில் பிண்டதானத்தைச்செய்வது சரியில்லையென்று நினைத்துப் பூமியில் தர்ப்பத்தைப்போட்டு அதில் தத்தம்செய்தார். தர்மம் தெரிந்து நடந்ததற்கு அவர் தகப்பனார் சந்தோஷப்பட்டு அவருக்கு ஸ்வச்சந்தமரணம் உண்டாகட்டும் என்று அநுக்ரஹம்செய்து மறைந்துவிட்டார். ஆகையால் நாம் செய்யும் பிண்டதானமும், ஹவிஸ்ஸும், மேற்கூறிய பித்ரு தேவதைகளுக்குப்போய் அவர்களால் இறந்துபோன பந்துக்களான ஜீவாத்மாக்களுக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றன. இந்த ரஹஸ்யம் மார்க்கண்டேயருக்கு ஸநத்குமாரரால் சொல்லப்பட்டது என்று ஹரிவம்சத்தில் முதல் பர்வத்தில் 16,17-வது அத்யாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

நிமி ஏற்படுத்தின ப்ரகாரம் எல்லோரும் ச்ராத்தம் செய்ததும், பித்ருக்கள் ஏராளமான ஹவிஸ்ஸை புஜித்து அஜீர்ணமுண்டானவர்களாய் சந்த்ரனிடம் முறையிட்டார்கள். அவர் ப்ருஹ்மாவிடம் போகும்படிசொல்ல, பித்ருக்கள் ப்ருஹ்மாவிடம் போய்த் தங்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அவர் அக்னி பகவான் உங்கள் குறையை நிவர்த்திப்பார் என்றார். பிறகு பித்ருக்கள் அக்னியைவேண்ட, அவரும் இனி ஹவிஸ்ஸுக்களை என்னுடன் புஜியுங்கள், அதிகமான பாகங்களை நான் சாப்பிட்டுவிடுகிறேன் என்று சொன்னார். அது முதல் அக்னியில் ஹவிஸ்ஸானது ஹோமம் செய்யப்பட்டுவருகிறது.

ஆதலால் ச்ராத்தமென்பது ஆதிகாலத்திலேயே வேதங்களான ப்ரமாணங்களைக்கொண்டு, ப்ருஹ்மாவால் அறியப்பட்டு, அவருடைய ப்ரபௌத்ரனாகிய நிமிக்குத் தபோமஹிமையால் ப்ரகாசித்து, அதை, இது ப்ருஹ்மாவினுடைய இஷ்டத்தை அநுஸரித்ததுதான் என்று அந்த நிமிதெரிந்து, தான் அநுஷ்டித்து, பிறரை அநுஷ்டிக்கும்படி செய்த முக்யமான கார்யம். இதில் ப்ராஹ்மணர்களுக்குக் கொடுக்கப்படுகின்றவும் அக்னியில் ஹோமம் செய்யப்படுகின்றனவுமான த்ரவ்யங்கள் எல்லாம் பித்ருகணங்களென்று சொல்லப்படும் தேவதைகளின் வழியாக நம்முடைய இறந்துபோன பந்துக்களுக்கு எந்த லோகத்திலும் எந்த ஜன்மத்திலும் போய்ச்சேர்ந்து அவர்களுக்கு த்ருப்தியை உண்டாக்குகிற



தென்று சாஸ்த்ரங்களில் ஏற்பட்ட வ்யவஸ்தை. இது இப்படிநிற்க இறந்துபோன பந்துக்கள் ப்ரபன்னர்களாய் மோக்ஷத்தை அடைந்தவர்களாக இருந்தால் அவர்களுக்குப் பசி, தாஹம் முதலியது ஒன்றுமில்லாமலிருந்தபோதிலும் சாஸ்த்ரங்களில் ஏற்பட்ட மரியாதையை ஒருவனும் குலைக்கக்கூடாது என்று பகவத்கீதை பாஞ்சராத்ர சாஸ்த்ரம் முதலியவைகளில் சொல்லப்படுகிறபடியினால் பகவானுடைய ஆராதனமாக எண்ணி ச்ராத்தங்களைச் செய்யவேண்டியது. அதனால் பகவான்தானே த்ருப்தியடைகிறார். அப்படிச் செய்யாதவர்களுக்குப் பொதுவான சாஸ்த்ர மர்யாதையைக் குலைப்பதினாலுண்டாகும் பகவானுடைய கோபமும் அதனால் சிக்ஷையும் வருமென்று பூர்வாசார்யர்களுடைய தீர்மானம்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# முதலாழ்வார்கள்.

(ஸ்ரீ. உ. வே. கோ. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.)

(முன்தொடர்ச்சி.)

அப்படியே பகவானால் நியமிக்கப்பட்டவர்களாய் அவர்களும் ஜகத்தை உஜ்ஜீவநம் செய்வதற்காகத் தாம்ரபர்ணீ, வைகை, பாலாறு முதலிய திவ்ய நதிகளின் கரைகளில் மனுஷ்யர்களாக அவதரித்தார்கள். இவர்கள் தங்களுடைய உந்நதபதவியை விட்டுவிட்டு லோகஹிதார்த்தமாக அஜ்ஞானத்துக்கு இருப்பிடமாகிய இப்பூலோகத்தில் அவதரித்து அத்தால் ஆழ்ந்தமையினால் இவர்களுக்கு ஆழ்வார்கள் என்று திருநாமமாயிற்று. அன்றிக்கே இவ்ஸம்ஸாரமண்டலத்தில் இருந்தபோதிலும் தங்களுக்கு ஸ்வாபாவிகமான பகவத்பக்தியை விடாமல் அதிலேயே ஆழ்ந்திருந்தமையினால் இவர்களுக்கு ஆழ்வார்கள் என்று திருநாமமாயிற்றாகவுமாம். இப்படி இவர்கள் அவதாரம் செய்து, தங்களுடைய அர்த்தங்களை மறைத்துச் சொல்லுவதினால் மறை என்று சொல்லப்படுகிறதாயும், த்ரைவர்ணிகர்கள் மாத்திரம் அதிகரிக்கும்படியாயும் இருக்கிற வேதங்களின் அர்த்தங்களை எல்லோருமே எளிதில் அறியும்படியாகத் தமிழ்ப் பாஷையிலேயே ஸங்க்ரஹித்தருளியிருக்கிறபடியினால் இவர்கள் நமக்கு மிகவும் விசேஷ உபகாரம் செய்தவர்களானார்கள்.

பகவான் லோக ஹிதார்த்தமாக அவதாரம் செய்தருளும் ப்ரகாரம் வ்யூஹம் விபவம், ஹார்த்தம், அர்ச்சை என்று நான்கு ப்ரகாரமாயிருக்கும். அதில் வ்யூஹமும், அதின் உட் பிரிவுகளும் யோகம் செய்பவர்களின் அநுக்ரஹார்த்தமாக ஏற்பட்டபடியினால் நம்போலியர்களுக்கு அவை ப்ரயோஜனமில்லாமல் போயின. ஹம்ஸமத்ஸ்ய நரஸிம்ஹ ஹயக்ரீவ ராம க்ருஷ்ணாத்யவதாரங்கள் விபவங்கள் என்னப்படும். இவர்கள் வேறு [illegible]

ளில் அவதரித்ததால் கலியுகத்தில் பிறந்த நமக்கு ப்ரயோஜனமாகவில்லை. 'சில ஜீவர்களை விக்ரஹ விசேஷத்தாலும், சக்தி விசேஷத்தாலும் அதிஷ்டித்து அதிசயித கார்யங்களை நடத்துவதும் விபவபேதம்' என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டிருப்பதினுல் நித்யஸூரிகளின் அவதாரமான இந்த ஆழ்வார்களைப் பகவான் தானே அதிஷ்டானம் செய்து லோக ஹிதார்த்தமாக அவர்கள் மூலமாய்த் திவ்ய ப்ரபந்தத்தை வெளியிட்டருளினபடியினுல் இவர்கள் பகவானுடைய அபிநவமான தசாவதாரம் என்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் கேவலம் பகவத்பக்தியில் ஆழங்கால்பட்டு அதின் பரீவாஹமாகத் தங்களுடைய அனுபவத்தை ப்ரபந்தரூபங்களாக வெளியிட்டார்கள். இந்தத் தங்களுடைய அனுபவத்திற்கு அனுகுணமாக ஆங்காங்குச் சில இடங்களில் பரோபதேசமும் செய்திருக்கிறுர்கள். இவர்கள் நம் ஸம்ப்ரதாயத்திற்கு க்ரந்தமுகமாக மாத்திரம் உபகாரம் செய்தவர்கள் அல்ல. இவர்கள் பகவானை ஸாக்ஷாத்கரித்து அவனை நேரில் அனுபவித்து அவ்வனுபவத்தை நமக்குச் சொல்லுவதால் நமக்குப் பகவானிடம் விச்வாஸமுண்டாக்க ஸாக்ஷியுமானுர்கள். ஆகையால் இப் ப்ரபந்தங்கள் பகவான் ப்ரும்மாவிற்கு உபதேசித்தருளின வேதங்கள்போல் ப்ரமாண தமமாயின. இந்த ப்ரபந்தங்களுக்கும் ஆதியில் வேதங்களுக்கு உண்டானுற்போல் உபரோதம் உண்டாக, அவைகளை நிவர்த்தித்துத் தத்வார்த்தத்தைத் தங்களுடைய உபதேசத்தினுலும் அனுஷ்டானத்தினுலும் வெளியிடுவதற்காகப் பகவான் ஸ்ரீமந் நாதமுனிகள் துடக்கமான ஆசார்யர்களாக அவதரித்தருளினுன். இந்த ஆசார்யர்களுக்குப் பகவத்பக்தி இருந்ததேயாகிலும் இவர்கள் அதை முதல்படியில் வைத்துக்கொள்ளாமல் லோகத்தாரை சீர்திருத்துவதற்காகப் பரோபதேசத்தையே ப்ரதானமாகக் கொண்டவர்கள். இவர்கள் ஆழ்வார்களைப்போல் நித்யஸூரிகளின் அவதாரமாய்ப் பகவானுல் அதிஷ்டானம் செய்யப்பட்டவர்களாய் நிற்பதன்றிக்கே ஸாக்ஷாத் பகவதவதாரமாய் ஆசார்யர்கள் என்கிற திருநாமத்தைப் பெற்றவர்கள். நம் ஸம்ப்ரதாயத்திற்கு இந்த ஆழ்வார்களும் ஆசார்யர்களுமே ப்ரதான உபகாரகர்களாகையினுல் இவர்களை இந்த ஆழ்வார் இந்த உபகாரம் செய்தருளினவர், இந்த ஆசார்யன் இந்த உபகாரம் செய்தருளினவர் என்று விசேஷமாக அறிவது நமது கடமையாகும். ஆகையால் முதல்முதல் முதலாழ்வார்களின் உபகாரத்தை விசாரிப்போம்.

இப்படிப் பகவந்நியமனத்தினுல் அவதரித்த இவர்களில் முதல்முதலில் அவதரித்தவர்களாயும் பகவானுல் ஒரேகாலத்தில் அனுக்ரஹம் செய்யப்பட்டவர்களாயும் இருக்கிற பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் இவர்களுடைய அவதாரம், வைபவம் முதலியவை இங்கு ஸங்க்ரஹிக்கப்படுகின்றன.



ஆழ்வார் ஆசார்யர்களுடைய அவதாரகாலம், வைபவம் முதலியவைகள் குருபரம்பரையிலும், பார்க்கவ உப புராணத்திலும், அந்தந்த க்ஷேத்திர ஸ்தல புராணத்திலும் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. நவீன விமர்சகர்களில் சிலர் இவர்களுடைய அவதார காலத்தை விமர்சித்து இவர்கள் கி. பி. எட்டாவது நூற்றுண்டுக்குப் பின்பே அவதரித்திருக்கவேண்டுமென்று நிஷ்கர்ஷம் செய்திருக்கிறுர்கள். இது விஷயமாய் நாம் விமர்சம் செய்துகொண்டிருக்கிறேம். கூடியசீக்கிரத்தில் அது வெளிவரும். அதற்குள் இவர்களுக்குப் பொதுவில் ஸமாதானம் மாத்திரம் இங்குச் சொல்லப்படுகிறது. ஆழ்வாராதிகளின் அவதார காலத்தைப் பின்னுல் தள்ளிப்போட்டதினுல் புராதனத்வம் ஸம்பாதித்து அவர்களுக்கு ஒரு மேன்மை ஏற்படுத்தவேண்டியது என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக் கிடையாது. ஏனெனில் அவர்கள் விசேஷ கௌரவம் பண்ணுவதற்குக் காரணம் புராதனத்வம் அல்ல. அவர்களுக்குப் பிறகு எவ்வளவோ காலம் பிற்பட்டு அவதரித்த ஆசார்யர்களுக்கு அவர்கள் எல்லோரையும்விட விசேஷ கௌரவம், மர்யாதை முதலியவைகளை அவர்கள் செய்கிறுர்கள். ஒருவரால் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தின் கௌரவத்தினுல் மாத்திரமே ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒருவரை விசேஷ கௌரவம் செய்வதும், அது செய்யாமல் ஒழிவதுமேயன்றி காலத்தை முன்தள்ளிப் போடுவதினுல் அவர்களுக்கு விசேஷ கௌரவம் ஏற்படுவதாக நினைப்பதில்லை. இது விஷயம் விஸ்தாரமாய் பின்னுல் தனித்தொரு வ்யாஸத்தில் விவரிக்கப்படுமாகையினுல் இங்கு நமக்குப் பரம்பராகதமாக ஏற்பட்ட அவதார காலமே குறிப்பிடப்படுகிறது.

## பொய்கையாழ்வார்.

முதலாழ்வார்கள் என்று ப்ரஸ்தாபிக்கப்பட்டவர்களில் முதலில் அவதரித்தவர் பொய்கையாழ்வார் 'முத்திதரும் நகரமேழில் முக்கியமாம் கச்சி' என்று சொல்லப்படுகிற காஞ்சீபுரம் என்னும் க்ஷேத்திரத்தில், யதோக்தகாரி எம்பெருமான் ஸந்நிதிக்கெதிரில் இருக்கும் தடாகத்தில்,

(1) [illegible]

'ஸ்வர்ணமயமான ஒரு தாமரைபுஷ்பத்தில் ஜ்ஞானப்ரதம் என்று ப்ரஸித்திபெற்ற பாஞ்சஜந்யம் என்னும் நித்யஸூரியானவர் த்வாபரயுகத்தின் கடைசியில் (862901) ஸித்தார்த்தினு ஐப்பசிமீ சுக்லபக்ஷம் அஷ்டமி செவ்

வாய்க்கிழமைகூடின திருவோணநக்ஷத்திரத்தில் அவதரித்தருளினார். அவதார க்ஷணம் தொடங்கி பகவத்பக்தியிலேயே நித்ய த்ருப்தராய் நிற்கும் இந்த ஆழ்வார் அவதரித்ததும், பகவான் அவதரித்தகாலத்தில் திக்குக்கள் ப்ரஸன்னமானாற்போலே ப்ரகாசமாயின. பகவத் ஸந்நிதிக்கு எதிரில் அவதரித்தவராகையினால் பகவானுடையவும் பிராட்டியினுடையவும் கடாக்ஷம் இவருக்கு ஜாயமான தசையிலேயே உண்டாயிற்று. பகவானும் இவருக்கு காஸாரயோகி என்று திருநாமம் சாற்றி, இவருக்கு ப்ரபத்தி வித்யையும், மந்திர ரத்னமான த்வயத்தையும் தாமே உபதேசித்து லோகத்தில் அவற்றை ப்ரவசநம் செய்யும்படி நியமித்தருளினார்.

## பூதத்தாழ்வார்.

திருக்கடல்மல்லை (மல்லாபுரம்) என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஒரு குருக்கத்திப்பூவில் ஸ்ரீகதை என்னும் நித்யஸூரியானவர் த்வாபரயுகம் (862901) வதான ஸித்தார்த்தி வருஷ ஐப்பசிமீ சுக்லபக்ஷம் நவமி புதன் கிழமை கூடின அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்தார். பொய்கையாழ்வாரைப்போல இவரும் திவ்யதம்பதிகளினால் கடாக்ஷிக்கப்பட்டு, பூதத்தாழ்வார் என்கிற திருநாமம் சாற்றப்பட்டு ந்யாஸவித்யாதிகளால் உபதேசம் செய்யப்பட்டு அவற்றை லோகத்தில் ப்ரவசனம் செய்யும்படி நியமிக்கப்பட்டார். இவருடைய திருநாமம் ஸார்த்தகமாகாநின்றது. பூ ஸத்தாயாம் என்ற தாதுவிலிருந்து, இருப்பவர் என்றர்த்தம். அதாவது பகவத்தாஸ்யத்தை வஹித்தவர்களே வாஸ்தவத்தில் இருப்பவர்கள்; மற்றவர்கள் இருப்பதும் இல்லாததற்கு ஸமானம் என்றல்லவோ நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. 'அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்' என்பதும் 'அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விது:' என்பதும் இங்கனுஸந்திக்கத்தக்கது. 'கடல்வண்ணன் பூதங்கள்' என்னப்படும் நித்யஸூரிகளில் ஒருவர் என்றபடியாகவுமாம்.

## பேயாழ்வார்.

மயிலாபுரி என்று சொல்லப்படும் மயிலாப்பூரில் கொடிகளினால் சூழப்பட்ட ஒரு திருக்கிணற்றில் ஒரு செவ்வலரிப்பூவில் 862901-வதான ஸித்தார்த்தியில் ஐப்பசிமீ சுக்லபக்ஷம் தசமி வியாழக்கிழமை கூடின சதயதினத்தில் ஸ்ரீ நந்தகம் என்கிற நித்யஸூரி அவதரித்தருளினார். இவருக்குப் பகவானும் பிராட்டியும் மஹாயோகி என்கிற திருநாமம் சாற்றி மந்த்ராதிகளை உபதேசித்து, லோகத்தில் அவற்றைப் பரவும்படி செய்ய நியமித்தருளினார்கள். மஹத் என்றால் பெரிய என்றர்த்தமாதலால் இவருக்குப் பெரிய என்பது



விகாரமடைந்து பேயாழ்வார் என்றாயிற்று. அன்றிக்கே பகவத் குணானுபவத்தில் ஈடுபட்டிருந்த இவர் பேய்பிடித்தவரைப் போல் லோகத்தாருக்குத் தோன்றியபடியினால் இவருக்குப் பேயாழ்வார் என்று பெயர் வைத்தார்கள் என்றாகவுமாம்.

இப்படி இவர்கள் பகவானுக்குக் கைங்கர்யம் செய்துகொண்டுவரும் நித்யஸூரிகளின் அவதாரம் என்னும் அர்த்தத்தை ஸ்ரீதேசிகன் 'பாட்டுக்குரிய பழையவர் மூவரை' என்றருளிச்செய்தார். 'பாட்டுக்குரிய' என்றது, 'தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே' என்றும், 'ஏதத்ஸாம காயந்நாஸ்தே' என்றும், 'தமிழ் பல்லாண்டு இசையுடன்பாடுமே' என்றும் சொல்லுகிறபடியே பகவானுடைய முன்னிலையில் பாடுமவர்கள் என்றபடி. 'பழையவர்' என்றது 'யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:' என்கிறபடியே ஆதியில்லாமல் பகவானுடன்கூடவே பழையகாலம் தொடங்கி இருக்கும் நித்யஸூரிகள் என்றபடி. ஞானத்தில் இவர்களின் உயர்ந்த சக்தியை ப்ரத்யக்ஷத்தில் பார்த்திருக்கும் பகவான் முதலில் இவர்களை அவதரிக்கும்படி நியமித்தருளினான். இவர்களுடைய இந்த உத்கர்ஷத்தை இவர்களுக்குப்பின் அவதரித்த ஆழ்வார்களும் 'இன் கவிபாடும் பரமகவிகள்' என்றும், 'செந்தமிழ் பாடுவார்' என்றும் கொண்டாடினார்கள்.

இப்படிப் பகவானால் அனுக்ரஹிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட இவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் அறியாமலே பகவந்நியமநத்தைச் சிரஸாவஹித்துக்கொண்டு புண்யதீர்த்தங்கள், திவ்யதேசங்கள் முதலிய இடங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு, தேஹயாத்திராதிகளில் கவலையற்றவர்களாய்ப் பகவத்பக்தியே தலையெடுத்து, தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்துக்கொண்டு சிரகாலம் வஸித்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட பாகவதோத்தமர்களின் திருவடித்தாள்கள் படுவதே மிகவும் பாவனதமம் என்பது 'தோடுலாமலர்மங்கை தோளிணை தோய்ந்ததும், சுடர்வாளியால் நீடுமாமரம் செற்றதும் நிரைமேய்த்ததும் இவையே நினைந்து ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப்பொடி ஆடநாம்பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவதே' என்றும், 'பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால் ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர் நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாததூளிபடுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே' என்றும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

(இன்னும்வரும்.)

ஸ்ரீ:,

# ஸதாசார்யனை அடைந்த ஸச்சிஷ்யன்,

(ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர்.)

ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த ஸாரஸங்க்ரஹத்தில் 'சொல்லும்விடுசுருதிகளாம்படி திருத்தின ஸஹாவாமெ-ஶாவ தேசத்தாலே' என்றருளிச்செய்திருக்கிறபடியே தட்டான் கன்னன் இவர்களை அடைந்த உலோகங்கள் எப்படி ஆபரணங்களாகவும், பாத்திரங்களாகவும் இன்னும் உபயோகப்படும்படியான மற்ற சாமான்களாகவும் திருத்தப்படுகின்றனவோ, விச்வகர்மாவை அடைந்த கட்டை எப்படி கடம், பெட்டி, ஆஸனம் முதலிய பதார்த்தங்களாகச்செய்யப்படுகிறதோ, குயவனை அடைந்த மண் எப்படி பாண்டங்களாகிறதோ, ரஜகனை அடைந்த வேஷ்டி எப்படி மாலின்யத்தை இழந்து தாவள்யத்தை அடைகிறதோ, வாணியனைச் சேர்ந்த எள்ளு எப்படி எண்ணெய் ஆகிறதோ, அமுதுபடி காய்கறிகள் முதலியவை பாசகனை அடைந்து எப்படி ஈச்வர ஆராதனத்திற்கு யோக்யமான பதார்த்தங்கள் ஆகின்றனவோ, அதுபோல ஸதாசார்யனை அடைந்த சிஷ்யனும் இல் இருந்த ஸ்வரூபம்மாறி அதாவது காம க்ரோதாதிகளை இழந்து சமதமாதிகளைப் பெற்று, வணக்கமும் தயையும் மேலிட்டுப் பிறருக்கு உபகாரகமாயிருந்து, அர்த்தபஞ்சகங்களை அறிந்து, ஈச்வரன் நடத்தினவழியில் அடி தவராமல் நடந்து, மோக்ஷோபாயத்தை அநுஷ்டித்து, தான் இருக்குமளவும் பகவத் பாகவத கைங்கர்யங்களில் ஊக்கமும் ஆசார்யர்களுடைய க்ரந்தகால க்ஷேபத்தில் ருசியும் அர்ச்சாவதார ஸேவையில் ஆஹ்லாதமும் அடைய ப்ராப்தனாகிறான். இதுதான் மனுஷ்ய ஜன்மத்தை எடுத்ததற்கு நாம் உலகத்தில் செய்யவேண்டியகார்யம். இது ஸாமான்யமாக எல்லோருக்கும் எளிதில் தெரியக்கூடிய ஸங்கதி அல்ல. இது ஸதாசார்யர்களை அடைந்து அவர்களிடம் சிரபரிசயமும் சுச்ருஷையும் செய்து ஜன்மாந்தர ஸுக்ருதமும் ஏற்பட்டுத் தலைக்கட்ட வேண்டிய விஷயம். இது நிரம்பவும் துர்லபம். ஏனென்றால் அசேதனத்தைப்போல் ஆசார்யர்களுக்கு உட்பட்டு நடக்கக்கூடிய ஸச்சிஷ்யர்கள் மிகவும் அபூர்வம். தாக்ஷிண்யமில்லாமல் தயையோடுகூடிக்கொண்டிருக்கிற ஸதாசார்யர்களும் அபூர்வம்.

ஸர்வ ரக்ஷகனை ச்ரிய: பதியினுடைய ஸ்வாபாவிகா நவதிகாதிசயெ ஸீத்ருத்வத்தை (ஸ்வபாவத்திலேயேயுள்ள எல்லையில்லாத பெருமையையுடைய ஸர்வேச்வரனாயிருக்கும் தன்மையை) அறியாதார் மோக்ஷமார்க்கத்துக்கு வெளி



ப்பட்டவர்கள் என்று ஸ்ரீதேசிகன் ஸ்ரீபரமபதஸோபானத்தில் ஸ்பஷ்டமாக அருளிச்செய்திருக்கிறார். ஆகையால் நமக்கு முதலில் கிடைக்க நாம் ஆசைப்படவேண்டியதென்னவென்றால், நம்முடைய ஹேயகுணங்களைச்சீர்த்திருத்தவல்லமையுள்ள ஸதாசார்யனையடையவேண்டியது. அவருடைய குணங்கள் எப்படியிருக்கவேண்டுமென்பதைநம்முடைய பூர்வாசார்யர்கள்பலஇடத்தில்விசதமாக அருளிச்செய்திருக்கிறார்கள். சுருக்கமாக விசேஷண விசேஷ்ய உபயஸ்வபாவவிஷயமாக ஜீவேச்வரஸ்வபாவ விஷயமாகத்திருந்தக்கண்டுரைக்கவல்ல தெளிவுற்ற சிந்தையனாய் 1 குலிங்கசகுநி வ்ருத்தாந்தவைதேசிகனை டிஸிகநூஆத்மோஜ்ஜீவந அபேக்ஷிதங்களான ரஹஸ்ய சப்தார்த்தங்களை அஜ்ஞாநம் ஸம்சயம் விபரீதார்த்தம் விபரீத ருசிகள் என்ற இவை புகாதபடி உபதேசிக்க வல்லமை யுடையவனாயிருக்கவேண்டுமென்று அருளிச்செய்யப்பட்டது. இத்தகைய ஸதாசார்யன் தயை, பொறுமை, ஸத்யம், ஆஸ்திக்யம், அநுஷ்டானம், ஜ்ஞானம், பூர்வாசார்யபக்தி இந்த குணங்களோடுகூடியிருக்கவேண்டும். அவர்களிடம்தான் நமக்குத்தெரியவேண்டிய ரஹஸ்ய சப்தார்த்தங்களை உள்ளபடி ஸம்சயமில்லாமலும், விபரீத ருசிகள் புகாதபடியும் தெளிய அறிந்துகொள்ளலாம். இந்தத் தெளிவு நான்கு சாஸ்திரங்களையும் மற்றக்கலைகளையும் அப்யாஸம் செய்தால்தான் வருமோ என்கிற ஸந்தேகத்தை ஸ்ரீதேசிகன் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸாரநிஷ்கர்ஷாதிகாரத்தில், மற்றவித்யைகள் எல்லாம் வீண்கலைகள், விவேகிக்கு உபாதேயம் ரஹஸ்யத்ரயம் என்று நிவர்த்தித்தருளினார். ஸகல குணபூர்த்தியுடன் கூடிய ஸதாசார்யன் நேருவது அதிக கஷ்டம். பூர்வாசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் க்ரந்தங்களிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடாதா என்று ஸந்தேகம் ஏற்படலாம். அது அநுகூலத்திற்கு வராது. ஏனென்றால் நேரில் பல உதாஹரணங்களாலும் அநுபவத்தாலும் நிதர்சனங்களாலும் உபதேசம் செய்யும்பொழுதே மனதில் தத்வம் படிகிறது கஷ்டமாயிருக்கிறதை அநுபவத்தில் பார்த்திருக்கிறோம்.

'ஸாத்விகஸம்பாஷணாதி களடியாக முன்புள்ள ஸாமாந்ய ஜ்ஞானத்தையும் பரிஹரிக்கும் பாஹ்யகுத்ருஷ்டிகளுடன் சேராதே உபாயாந்தரத்

1. குலிங்கசகுநி யென்னும் கேட்டான் ஸாஹஸம்ரோகாரா, ஸாஹஸம் 8r காரா (அதிக அபாயம் நேரிடக்கூடிய காரியத்தைச் செய்யாதே, செய்யாதே) என்று பிறருக்கு உபதேசம் செய்துகொண்டு தான் ஸிம்மம் கொட்டாப் விடும்பொழுது பல் இடுக்கிலிருக்கிற மாம்ஸத்தை ஸாஹஸமாகக் கொத்திக்கொண்டு வந்து குடும்ப ரக்ஷணம் செய்யுமாப்போலல்லாமல் பிறருக்கு உபதேசம் செய்வது போலவே தானும் அநுஷ்டித்துக் காட்டுவது ஸதாசார்யலக்ஷணம் என்கிறதைக் காட்டுகிறது.

இலும் அதின் கர்த்தவ்யசேஷத்திலும் ப்ரயோஜநாந்தரத்திலும் துவக்கற்ற அதிகார உபாய பல பூர்த்தியுண்டாம்படி ஜ்ஞாநாம்ருத வர்ஷியான ஸதாசார்யன் பக்கலில் சாதகவ்ருத்தியாகை, ப்ரயாணத்ரய விவேகத்துக்குப் பலம் என்று ஸ்ரீதேசிகன் ஸாரஸங்க்ரஹத்தில் அருளிச்செய்தபடி ஸதாசார்யனை அநுவர்த்தித்து அவருடைய திவ்யதிருமேனி ஸேவையையே தாரகமாயும், ஜ்ஞாநாம்ருதவர்ஷியான சொற்களே போஷகமாயும், அவருடைய திருநாம அநுஸந்தானமே போக்யமாகவும், சாதகபக்ஷி மேகவர்ஷத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டு இருக்குமாப்போல், மிகவும் ஆவலுடனும் ஆதரவுடனும் காத்துக்கொண்டிருக்கில் ஸச்சிஷ்யனுக்குத் தத்வார்த்தம் எளிதில் தெரியுமே அல்லது மற்றவர்களுக்குப் புலப்படாது. ஆசார்யன் கடாக்ஷத்தாலும் அநுக்ரஹத்தாலும் நல்லகதியடையலாம். உதாஹரணம் க்ஷத்ரபந்து வ்ருத்தாந்தம் முதலியவற்றில் காணலாம். "க்ஷத்ரபந்து என்கிற ராஜா காட்டில் வஸித்துக்கொண்டிருந்து அங்கிருந்த மஹருஷி முதலியவர்களை ஹிம்ஸித்துக்கொண்டிருந்தான். இப்படிப்பல ப்ருஹ்மவித்துக்களிடத்தில் செய்யப்பட்ட பாபங்கள் அதிகமாயிருந்தபோதிலும் ஏதோ ஒரு ஸுக்ருதாம்சம் பலிக்கும் காலத்தில் நாரதமஹர்ஷியை ஸந்திக்கும்படி நேர்ந்தது. இவன் தன்னுடைய வழக்கப்ரகாரம் அவரை அடிக்கத் தடியை ஓங்கிக்கொண்டு அவரை நோக்கிச்செல்ல, அவர், நீ இப்பொழுது என்னை அடிக்கவருகிறாயே இது பாபமா புண்ணியமா என்று உனக்குத் தெரியுமா? பாபமாயிருந்தும் குடும்ப ரக்ஷணாதிகளுக்காகச் செய்கிறாயேயாகில் நீ யாருக்காக இந்தப் பாபத்தைச்செய்கிறாயோ அவர்கள் இந்தப் பாபத்தில் ஒரு பாகத்தை ஏற்றுக்கொள்வார்களா என்றறிந்துவா, நான் அதுவரையில் இங்கேயே இருக்கிறேன். நீ திரும்பி வந்து உன் இஷ்டப்படி செய்" என்று சொல்ல, இவனுக்கும் பாகவதோத்தமராகிய அவருடைய தர்சனத்தால் கொஞ்சம் ஜ்ஞானம் உண்டாகி, வீட்டிற்குச்சென்று பார்யாதிகளைப் பாபத்தில் பங்கு பெறுவார்களா என்று கேட்க, அவர்கள் மாட்டோமென்று மறுக்க, நாரதரிடம் திரும்பிவந்து "நான் இதுவரையில் தெரியாமல் அநேகம் பாபங்களைச்செய்துவிட்டேன். இதிலிருந்து தப்புவதற்கு ஒரு உபாயம் சொல்லவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, கருணாநிதியான நாரதர், க்ஷத்ரபந்துவுக்கு உபதேசாதிகளைச்செய்து உபாயாநுஷ்டானம் பண்ணி மோக்ஷத்தை யடையும்படி செய்தார் என்று க்ஷத்ரபந்துவினுடைய சரித்ரம் உபதேச பரம்பரையில் வந்து கொண்டிருக்கிறது.

தவிர ஸதா ஆசார்யர்கள் திருநாமத்தைப் பக்தி பூர்வகமாக அநுஸந்தானம் செய்துகொண்டு வருகிறவர்களுக்கு எப்படிப்பட்ட மஹாவிபத்துக்களும்



ஸூர்யனைக்கண்ட பனிபோல் விலகிவிடுகின்றன. ஒரு மஹானுடைய திருநாமத்தை உச்சரித்ததினால் நிர்மானுஷ்யமான காட்டில் புலி ஒதுங்கிப்போய் விட்டது என்று பெரியோர்கள் சொல்ல அடியேன் கேட்டிருக்கிறேன்.

ஸ்ரீ:

# ப்ரபத்தி.

(ஸ்ரீ. உ.ப. வே. ஸ்ரீசைல தாதாசார்யர்.)

இது கைம்முதலில்லாவனுக்கு அவன் கோரும் எல்லாப் பலன்களையும் சிரமம் என்பதே யில்லாமல் கைக்கூடாகச் செய்யக்கூடிய உபாயம்; ஒரே தடவை அநுஷ்டிக்கவேண்டியது. அதற்கென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட அங்கம் ஐந்தைவிட வேறு அங்கமொன்றும் இதற்கு இல்லை.

எம்பெருமான் திருவடிகளிலே ரக்ஷித்துக்கொள்ளுகிற பாரத்தை அல்லது ரக்ஷிக்கிற பாரத்தை ஸமர்ப்பிக்கிறது இதில் ஒரு அம்சமாகையால் இத்தை பரந்யாஸம் அல்லது பரஸமர்ப்பணம் என்றும் சொல்லுவார்கள்.

நீயே ரக்ஷிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறதுபற்றி இதற்கு சரணாகதி யென்கிற வ்யவஹாரம். இந்த உபாயம் ச்ருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களில் போலே பகவத் சாஸ்த்ரங்களான ஸ்ரீ பாஞ்சராத்திர ஸம்ஹிதைகளிலும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. இது நம் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. மஹநீயர்களான சிஷ்டர்களின் அநுஷ்டானமும் காட்டப்பட்டிருக்கிறது. இந்த உபாயத்தை அனுஷ்டிக்கும் பாக்கியவானை வெகு பெருமைப்படுத்தியும் ஸ்துதித்துமிருக்கிறது.

இதுவே பரமஹிதமாகையாலே ஆஸ்திகர்களெல்லாரும் இதன் விஷயமாய் சாஸ்த்ரார்த்த நிர்ணயம் இருக்கும் விதத்தைத் திருவுள்ளம்பற்றி இருப்பார்களென்பது நிர்விவாதம். இதில் முக்கியமோ அமுக்கியமோ ஆன ஒரு விஷயத்தை இங்கு ப்ரஸ்தாபம் செய்கிறேன்.

இந்த ப்ரபத்தியை யாரிடத்தில் செய்யவேண்டுமென்னும் விஷயம் நிரூபிக்கப்படும்போது வேண்டப்படுகிற பலத்தைக்கொடுக்க ஸாமர்த்தியமும் க்ருபையும் உடையவனிடத்தில் செய்யவேண்டுமென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருப்பதை ஜ்ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

ஸாநுக்ரோஶே ஸமர்தே² ப்ரபத³நம்ருஷிபி⁴: ஸ்மர்யதே தத்³விஶிஷ்டே லோகேப்யேதத் ப்ரஸித்³த⁴ம் ந ச விஹதிரிஹ ப்ராப்யதே க்வாபி தந்த்ரே,' என்று ந்யாஸவிம்ஶதி ஸ்ரீஸூக்தி.

(தயையும் ஸாமர்த்தியமுமுடையவனிடத்தில் தனக்குவேண்டிய பலனுக்காக ப்ரபத்திசெய்யவேண்டியதென்று ஸ்ம்ருதிகளில் மஹரிஷிகளால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நீதி லோகமர்யாதையிலும் ப்ரஸித்தமே. எந்த சாஸ்திரத்திலும் இது மறுக்கப்பட்டிருக்கவில்லை)

இதிஹாஸ ச்ரேஷ்டம் என்று கொண்டாடப்படுகிறதும் சரணாகதிஸார மென்று ப்ரஸித்தநாமம் பெற்றதுமாகிய ஸ்ரீராமாயணத்தில் ஏழுகாண்டங்களிலும் சரணாகதியின் அநுஷ்டானம் விளங்கக் காட்டப்பட்டிருக்கிறது. மஹாபாரதத்திலும் பல இடங்களில் இது சொல்லப்பட்டிருக்கிறது.

தேவதைகள் ராவணவதத்திற்காக ஸ்ரீமந்நாராயணனிடம் சரணாகதி செய்தார்களே, அது அர்ச்சாவதாரத்திலா?

இளையபெருமாள் தம்மைக்கூட அழைத்துப்போய்க் கைங்கர்யம் கொண்டருளவேண்டுமென்று பண்ணின ஶரணாகதி அர்ச்சாவதாரத்திலா?

விபீஷணாழ்வான் சரணாகதி, காக ஶரணாகதி, திரிஜடா ப்ரபத்தி இவைகளில் எதுதான் அர்ச்சாவதாரத்திலே?

த்ரௌபதி பாண்டவர்கள் இவர்கள் செய்த சரணாகதி தான் அர்ச்சாவதாரத்திலா?

உன்னைச் சரணமடைந்து முசுகுந்தன் க்ஷத்ரபந்து முதலியவர்கள் மோக்ஷம் பெற்றார்களென்று,

'ஸரணம் ஸமுவக³தா தம் ணாஹ முசுகுந்த³ க²த்தப³ந்து⁴ பமுஹா'

என்று அச்யுத சதகத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

ஆகிஞ்சந்யத்தையே தனமாக உடையவர்களான, த்ரௌபதி, தமயந்தி, ராக்ஷஸி, விபீஷணன், க்ஷத்ரபந்து, முசுகுந்தன், கஜேந்த்ரன், பாண்டவ தேவன், ஸுமுகன், த்ரிசங்கு, சுனச்சேபன், கிராதன், காக கபோதாதிகள் சரணாகதராயிற்று' என்று ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸூக்தி.



'விஶ்வாமித்ர கபோத ராக⁴வ ரகு⁴பதி தே³வபத்நீ காலீஜங்க⁴ ப்³ருஹஸ்பதி ப்ரப்⁴ருதிபி⁴ ந்யஸ்தோ ஹ்யயம் ராஜமார்க³:'

விஸ்வாமித்ரர், கபோதம், பெருமாள், ரகுமஹாராஜன், தேவபத்னிகள், காளிஜங்கம், ப்ருஹஸ்பதி முதலிய மஹான்களால் இந்த ராஜமார்க்கம் (ஸ்தாபிக்கப்படுகிறது) என்று சரணாகதிக்கு விஷயமான கார்யங்களைச்சொல்லியிருக்கிறதே, இவைகளெல்லாம் அர்ச்சாவதாரரூபத்திலென்று சொல்லப்போமோ?

ஸ்ரீ வசனபூஷணத்தில் ப்ரபத்தி அர்ச்சாவதாரத்திலேயே யென்று நியமம் சொல்லப்பட்டிருக்கிறது.

'ப்ரபத்திக்கு அர்ச்சாவதார விஷயத்வ நியமம் வ்யாஹதம்' என்று வசனபூஷணச் சீர்வகுப்பு.

'இவர்தாம் ப்ரபத்திக்கு அதிகாரி நியமம் இல்லையென்று உபபாதிக்குமிடத்திலே பாண்டவர்கள், த்ரௌபதி, காகம், காளியன், கஜேந்திராழ்வான், விபீஷணாழ்வான், பெருமாள், இளையபெருமாள் இவர்களையும், பல நியமமில்லை யென்று உபபாதிக்கும் இடத்தில் அவர்களுக்கு வேண்டியிருந்த பலங்களையும் எடுத்துக் கூறியிருப்பதாலும் அவர்கள் ப்ரபத்தி செய்தது அர்ச்சாவதாரத்திலே அன்றாகையாலும் ஸ்வவசந விரோதம். ஸம்ஸாரிகளுக்கு அர்ச்சாவதாரம் ஸுலபமாக ஆலம்பனமாகும் என்பது மாத்திரமேயுள்ளது' என்று அதன் வ்யாக்கியானமான பட்டர்படி.

ப்ரபத்தி அர்ச்சாவதாரத்தில் பண்ணக்கூடாதென்று யாரும் சொல்லமுடியாது; சொல்லவும் இல்லை. ஆகையால் ஆழ்வார் உடையவர் முதலானோர் அர்ச்சாவதாரத்திலே ப்ரபத்திசெய்ததுகொண்டு ப்ரபத்தி அர்ச்சாவதாரத்திலேயே செய்யவேண்டுமென்று நியமம் சொல்லமுடியாது.

பகவச் சாஸ்திரங்கள் ப்ரதானமான ப்ரமாணமே. அதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் இப்போதைய நிலையில் அனேகர் அநேகவிதமான கலப்பு செய்துவிட்டிருப்பதால் மஹாபுருஷர்கள் எடுத்து உதாஹரியாத வசநங்கள் விச்வாஸத்திற்குரியனவல்ல. அதற்கு இரண்டொரு நிதர்சனம் காட்டுவோம்.

பெருமாளுக்குக் கண்டருளப்பண்ணவேண்டியதற்காகச் சாற்றமுது செய்தருளவேண்டிய முறையைச் சொல்லவந்த ப்ரகரணத்தில் பருப்புவகை நெய்பொடி களஞ்சம் சீரகம் முதலியவைகளையும் சேர்த்து எல்லாவற்றையும்

வறுத்து இடித்துச் சேர்க்கவேண்டுமென்று ஸ்ரீவிஷ்ணுதிலக ஸம்ஹிதையில் சொல்லப்பட்டதாக வசனம் இருக்கிறதே. இது எவ்வளவு மதிப்புக்கு உரியது? களஞ்ஜம் புஜிக்கலாகாதென்று சிறுவர்களும் அறிவார்களே.

பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீதேசிகன் இவர்களால் ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியாக வ்யாக்யானம் செய்யப்பட்டதும் ஸ்தோத்ர ரத்நத்தில் மஹான்கள் எல்லாராலும் சேர்த்து அநுஸந்திக்கப்பட்டதுமாகிய 'அபராத ஸஹஸ்ர பாஜநம்' இத்யாதி ச்லோகம் பாஞ்சராத்திர ஸம்ஹிதைகள் சிலதில் காணப்படுகிற வேடிக்கை யாருக்குத்தான் ஆச்சரியத்தைக்கொடாது?

பழைய ஏட்டு ப்ரதிகளில்லாமல் புதிய காகிதப்பிரதிகளில் மாத்திரம் அதிகமாகக்காணப்படுகிற ஜயாக்யஸம்ஹிதையின் சேர்க்கைப் பாகங்களைப் பார்த்து நிர்மாணம் செய்பவர்கள் எவ்வளவு வருத்தமடையமாட்டார்கள்.

இவ்விதமான கலக்கம் சிறிது காலத்திற்கு முன்பு ஸ்ம்ருதிகளில் ஆரம்பிக்கப்பட்டது. விதவா விவாஹத்திற்கு வேண்டிய அளவு வசனங்கள் கல்பிக்கப்பட்டுச் சேர்த்துவெளியிடப்பட்டன. மஹாபண்டிதர்கள் பார்த்து விமர்சித்து நிபந்தனகர்த்தாக்கள் எடுத்து உதாஹரியாத எந்த வசனத்தையும் ப்ரமாணமாக அங்கீகரிப்பதில்லையென்று வ்யவஸ்தை செய்தார்கள்.

கமலாகரபட்டர் தாம்செய்த நிர்ணயஸிந்துவில் ஹேமாத்ரி உதாஹரித்த தேவல வசனம் அபரார்க்கத்தில் எடுத்தவசனம் என்று சொல்லியிருப்பது இந்த நிபந்தனைக்கு ஆதாரமாயிற்று. இதை யாவரும் திருவுள்ளத்தில் மறவாமல் வைத்திருக்கவேண்டும்.

குலக்ரமமாக வரும் ஸூத்ரமார்க்கத்தைவிட்டு பாஞ்சராத்ரமார்க்கத்தை அவலம்பிக்கக்கூடாதென்று ஸ்ரீ பாஞ்சராத்திர ரக்ஷையில் ஸ்ரீதேசிகன் ஸித்தாந்தம் செய்தருளியிருக்கிறார். பாஞ்சராத்ர மார்க்கத்தை அநுஸரியாததைக்கொண்டு அவர்களுக்கு யாதொரு குறையும் இல்லையென்றும் அருளிச்செய்திருக்கிறார். அப்படியிருக்க ஸூத்ரவிதியோடு பாஞ்சராத்திர விதியையும் கலந்து கர்மங்களை அநுஷ்டிக்கவேண்டுமென்கிற குகல்பனை இப்பொழுது கிளம்பியிருப்பது எவ்வளவு ஆச்சர்யமானது பாருங்கள்.

பண்டிதர்களின் மாதிரி இவ்விதமாய் முடிவுபெற்றிருக்கிற இந்தக்கலியில் எதை நம்பி என்ன நிர்ணயம் செய்யக்கூடும்? வஞ்சனைவழி தெரியாதார் பாடு எவ்விதமாயிருக்கும்?



இது நிற்க—

ப்ரபத்தி அர்ச்சாவதாரத்திலே செய்யவேண்டுமென்கிற நியமம் சாஸ்த்ரஸம்மதமன்று. ஆசார்ய ஸம்மதமுமன்று. அர்ச்சாவதாரத்தில் பண்ணக்கூடாதென்பதில்லை. அர்ச்சாவதாரத்தில் செய்வதில் பல ஸௌகர்யங்களுண்டு. க்ருஹார்ச்சையில் செய்யக்கூடாதென்பதுமில்லை ஆலயார்ச்சையிலேயே செய்யவேண்டுமென்பதுமில்லை. க்ருஹார்ச்சை காம்யமென்பதுமில்லை. ஆலயார்ச்சை காம்யமன்றென்பதுமில்லை. எங்காவது அப்படி வசனம் காணப்பட்டாலும் அது ஸ்துதி பரமென்று கொள்ளவேண்டும். அவை கல்பிதங்களேயானாலும் அவற்றிற்கு மர்யாதை கொடுப்பது நியாயமேயாம்.

'நஹி நிந்தா நிந்த்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே, நிந்த்யாதிதரத் ப்ரசம்ஸிதும்

இதி ஹி ந்யாய விதஃ'

(ஒன்று நிந்திக்கப்படுமாகில் அந்த நிந்தையானது அதை நிந்திப்பதற்காகப் பிறந்ததன்று கொள்ளாமல் மற்றொன்றை ஸ்துதிப்பதற்காகப் பிறந்ததென்று கொள்ளவேண்டுமென்று மீமாம்ஸா ந்யாயம்.)

ஸாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹம் இவ்வளவோடு போதும். விவாதமும் பாண்டித்யமும் சாஸ்த்ரார்த்த நிர்ணயித்திற்கு அநுகூலமாகாதவரையில் வீண் ஆடம்பரமேயாம்.

இப்படி சொல்லப்பட்ட அம்சங்களில் சாஸ்த்ரஸம்ப்ரதாயங்களுக்கு விரோதமேதுவாவது இருந்து காட்டப்பட்டால் அதை கௌரவத்துடனேற்றுக்கொள்ள ஸித்தனாயிருக்கிறேன்.

---

குறிப்பு—இந்த வ்யாஸத்தை பராமர்சித்ததினால் ஏற்படுவது என்னவென்றால் ப்ரபத்தி அர்ச்சாவதாரத்திலேயே செய்யவேண்டும் என்றும், அதுவும் ஆலயார்ச்சைகளிலேயே செய்யவேண்டும் என்றும் சிலர் ஸித்தாந்தம் செய்திருப்பதாகவும் அது உசிதமல்ல என்பதை ஸ்தாபித்திருப்பதாகவும் ஏற்படுகிறது. சரணாகதி எல்லா புகல்களிலும் அநுஷ்டிக்கக்கூடியதாகையினாலே அது அர்ச்சாவதாரத்திலேயே செய்யவேண்டும் என்று நிர்த்தாரணம் செய்வதற்கு ப்ரஸ்தாபமே இல்லை. இதில் உதாஹரிக்கப்பட்ட ஸ்ரீ வசனபூஷண வாக்யத்திற்கும் தாத்பர்யம் அதன் வ்யாக்யானத்தில் ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆகிலும் அர்ச்சாவதாரத்தில் செய்வதில் ஸௌகர்யாதிகள் அதிகம் என்பதை அனேக இடங்களில் நம் பூர்வாசார்யர்கள் நிரூபித்திருக்கிறார்கள். விபீஷணாதிகள் சரணாகதி செய்யும்பொழுது சரண்யன் நேரிலேயே அவர்களுக்கு நேர்ந்தமையால் அவனிடம் சரணாகதி பண்ணினார்கள். இந்தக் கலிகாலத்தில் நமக்கு அந்த சரண்யனுடைய ஸாந்நித்யம் இல்லாமையினால் அர்ச்சாரூபியான அவனிடத்திலேயே சரணாகதி செய்யவேண்டியதாகிறது. அப்படிப்பட்ட அர்ச்சைகளில் ஆழ்வார்களினால் மங்களாசாஸநம் செய்யப்பட்ட திவ்யதேசங்களில் ஸாந்நித்யம் செய்திருக்குமவைகள் விசேஷமென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ப்ரபத்தியின், கரண மந்திரமாகிய த்வயத்தில் சரணசப்தத்தினால் திவ்யமங்கள விக்ரஹம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதினால் அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்துடன் கூடியிருக்கும் எம்பெருமானிடத்திலேயே ப்ரபத்தி செய்வதே சாஸ்திர ஸம்மதமாகும் என்பது ஸுஸ்பஷ்டம். க்ருஹார்ச்சை ஸ்வார்த்தமாக ஏற்பட்டபடியினால் மோக்ஷார்த்தமாகிற ப்ரபத்தியை அங்கு செய்வது [illegible]—என்பது. [கோ. ஸ்ரீ — உ. ஸ.]

ஸ்ரீ:

# திருவாய்மொழியின் பெருமை.

(ஸ்ரீ. உ. வே. கே. ராஜகோபாலாசார்யர், B. A. B. L.)

திருவாய்மொழியின் பெருமையும் ஆழ்வாரின் வைபவமும் என்று வேதாந்ததீபிகையில் 14-வது ஸம்புடம் 9, 10, 11, 12 வது ஸஞ்சிகைகளில் பகவத் விஷயத்தில் அத்விதீய ஜ்ஞானமும் அனுபவமுமுள்ள சேட்லூர் வித்வான் பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. நரஸிம்ஹமாசார்யர் ஸ்வாமி ஒரு வ்யாஸம் க்ருபையாய் ஸாதித்திருக்கிறார். அத்துடன் இன்னும் சில அம்சங்கள் குறித்தால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியமாயிருக்குமென்று நம்பி அவைகளை இதில் விவரிக்கிறோம்.

சைவஸித்தாந்தத்தில் மூவரில் மாணிக்கவாசகருடைய க்ரந்தத்தை சைவர்கள் அருமையும் பெருமையும் பாராட்டி வேததுல்யமாக நினைத்து கௌரவிக்கிறார்கள். வாஸ்தவத்தில் அவருடைய க்ரந்தம் மனஸை உருக்கி பக்தியை உண்டாக்குகிறது என்று அதைப் படிக்கிறவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியதே. இதை போப் என்னும் துரை ஆங்கில பாஷையில் தர்ஜமாச் செய்து அதைப்போலே மனஸை பக்திக்கு ஆள்படுத்தும் க்ரந்தங்களில் சிறந்தது என்று கூறியிருக்கிறார். பின்னுள்ள ஆங்கில தத்வதர்சிகளும் அந்தத் திருவாசகத்தை வியப்புடன் படித்து நன்கு மதித்திருப்பதுமன்றி வேறு மதங்களில் இப்படி பக்தி புரஸ்ஸரமாய் கடவுளைப் ப்ரார்த்திக்கும் ஸ்தோத்ரங்கள் இல்லையென்றும் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், அந்தோ! நம் திருவாய்மொழியைப் படிக்கிலர். படித்தால் ரஸானுபவம் செய்யாமல் விடார். ஆயினும் நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திக்கு முன் அக்கிரந்தங்கள் பெருமைப் படா, என்று தகுந்தவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். முதல் முதல் நடுச்சங்கத்துப்புலவராகிய இடைக்காடரே 'வாய்மொழிபோல் ஆய்மொழிகள் சாலவுளவெனினும் அம்மொழியின் சாய்மொழி என்பேன் தகைந்து' என்று சொல்லியிருக்கிறார். இவர் திருவாசகத்தைக் குறித்தே இதைச்சொல்லியிருக்க வேண்டுமென்று நம்புகிறோம். திருவாய்மொழி திருவாசிரியம் இவைகளுக்கு எதிர்த்தட்டாக திருசப்தம் கூட்டிப் பெயர் வழங்கும் திருவாசகமே இப்புலவர் மனதில் மேல் பாட்டுக்கு ஸங்கதியாயிருக்கவேண்டுமென்பதில் ஸந்தேஹமில்லை. சாய்மொழி என்கிற பதத்துக்கு போலி அதாவது முன்னுள்ளதைப் பார்த்து அதைப் போலவே தானும் அதன் சாயையை அனுஸரித்த க்ரந்தமென்று அர்த்தமாகிறது. ஆழ்வாருடைய ஒவ்வொரு தசகமும் வேதங்களிலுள்ள எல்லா ஸாராம்சங்



களைத் திரட்டிக்கொடுப்பதுமன்றி, காவ்யரஸத்தாலும், பக்தியின் நிறைவினாலும் மனஸை கவர்ந்து இதற்குமேல் அனுபவம் இனி நமக்குக்கிடையாதென்று ஊர்ஜித புத்தியை நமக்கு உண்டாக்குகிறது.

ஒரு பாசுரத்திலும் கூட மஹத்தான தத்வங்களை அருமை பெருமையுடன் விளக்குவதுமல்லாமல், வேதம்போல் தத்வமிதுதான், இதை நம்பினவற்குப் பயன் என்றுசொல்லாமல் ஆங்காங்கு 'தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்று நம் ஸ்ரீவேதாந்ததேசிகன் அருளிச்செய்திருக்கிறபடி மறைந்த காரணங்களையும் நமக்கு விசதமாய்த் தெரிவிக்கின்றன. இதற்கு உதாஹரணமாக ஒரு பாசுரத்தை எடுத்துக் காட்டுவோம்.

யாவையும் யவரும் தானாய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசே ருயிரி னுள்ளால் ஆதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக் கூடில் அவனையும் கூடலாமே. 3-4-10.

இவ்வுலகத்திலிருக்கும் எல்லா அசேதனவஸ்துக்களுக்கும் சேதனவஸ்துக்கள் எல்லாவற்றிற்கும் தான் அந்தராத்மாவாக இருந்தபோதிலும் அந்தந்த வஸ்துக்களுக்கு ஏற்பட்ட தோஷங்களோடு ஸம்பந்தப்படாதவன், அந்தந்த வஸ்துக்களை அறியும் கண் முதலிய ஐந்து இந்திரியங்களாலும் அறியப்படாதவன், அந்தந்த வஸ்துக்களைச்சொல்லும் பதங்களினால் நேராகச்சொல்லப்படாதவன், ஜ்ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாக உடையவன் ஸர்வேச்வரன். இது எப்படிப் பொருந்துமெனில் இந்தச் சரீரத்துக்குள்ளிருக்கும் ஆத்மாவுக்கு இந்தச் சரீரத்திலிருக்கிற சிறுப்பது பெறுப்பது இழத்தனம் முதலிய விகாரங்கள் சேருகிறதில்லை என்பது எப்படி ஸம்பவிக்கிறதோ அப்படியே அந்தந்த வஸ்துக்களிலிருக்கிற தோஷங்கள் ஸம்பந்தப்படுவதில்லை என்பதும் ஸம்பவிக்கும்.

•

இப்பாசுரத்தில் வேதத்தினுடைய நிஜஸ்வரூபத்தை விளக்கும் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயமாகிய நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் உண்மையை நமக்கு எளிதில் விளங்கச்செய்ய, வேதங்களில் 'எவனுக்கு ப்ருதிவீ சரீரமோ' என்று தொடங்கி பலவிதமாக நிரூபித்திருக்கும் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள சரீர, சரீரி பாவத்தையும், 'ஒரு மரத்தில் ஒரு கிளையில் இரண்டு பக்ஷிகள் கூடியிருந்து ஒன்று பழத்தை போக்யமாக ஸாப்பிடுவதும் மற்றொன்று ஸாக்ஷியாக ஸம்பந்தப்படாமல் பார்த்திருக்கிறதென்றும்' அர்த்தமுள்ள வாக்யங்களாலே நிரூபித்திருக்கும் தத்வமாகிய கர்ம பலானுபவம் ஜீவாத்மாவுக்கு மாத்திரமே என்றும், அதனுள் சரீரியாகிய பரமாத்மாவுக்கு ஸம்பந்தமில்லை என்பதை 'தோய்விலன் உணர்வின் மூர்த்தி' என்று நமக்கு சுருக்கமாகவும் விசதமாகவும் அருளிச்செய்திருக்கிறார். இதுமாத்ரமல்ல, வேதம் சரீராத்மபாவம், இரண்டு ப்ருதக்காக நிரூபிக்க

கூடிய வஸ்துக்களில் எப்படி ஒன்று சேர்ந்திருக்குமென்று சங்கிக்கும் வாதிகளுக்குச் ஸமாதானம் சொல்லாமல் மறைபொருளாய் விட்டுவிட்டதை ஆழ்வார் அவரவர் தம் சரீரத்தையே தொட்டுக்காட்டி உதாஹரிக்கிறார். எப்படியென்னில், முதலில் சரீரத்துக்குள் ஜீவாத்மா இருப்பதுபோல், ஜீவாத்மாவில் பகவான் அந்தர்ப்ரவிஷ்டராக இருக்கிறார் என்றும், உதாஹரித்து நிரூபித்திருக்கிறார். இந்தப் பரமாத்மா கேவலம் ஜ்ஞானஸ்வரூபனாயும், கர்மஸம்பந்தங்களில்லாதவனானதினாலே சரீரமாகிய ஜீவாத்மாவின் தோஷங்கள் அவனைத்தொடாதென்றும், அதற்கு உதாஹரணமாக அவரவருடைய ப்ரத்யாகாத்மா அவரவருடைய தேஹத்தில் முழுவதும் வ்யாபித்து அந்த சரீரத்தை அதிஷ்டானம் செய்து ஏவல்செய்து நடத்தினாலும் அவரவர் சரீரத்தினுடைய தோஷங்களால் கலசாதபடி தான் தனித்திருப்பதைக்கொண்டே அவரவர்க்குப் பரமாத்மா ஜீவாத்மாவினுடைய தோஷங்களில் தோய்விலன் என்று நிதர்சனமாகுமென்று நிரூபித்திருக்கிறார். இப்படித் தோஷங்களால் தொடப்படாமலிருக்கும் தன்மையை 'அபஹதபாப்மா', 'திவ்யோதேவ ஏகோ நாராயண:' என்று அந்தர்யாமித்வம் சொல்லுமிடங்களிலெல்லாம் பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தத்வங்களை நம் ஸ்ரீதேசிகன் தேஹமாகிற அசேதனத்தை தேராகவும், ஜீவாத்மாவை அதில் பூட்டியிருக்கும் குதிரையாகவும், அந்த ஜீவாத்மாவை அநேக பூர்வகர்ம பலானுஸாரமாய் ப்ரயோகிப்பிக்கும் பரமாத்மாவை ஸாரதியாகவும் நிரூபித்திருக்கிறார். இப்படி நிரூபிக்குமுன் விசிஷ்டாத்வைதத்திலுள்ள மேல்கண்ட இரண்டு தத்வங்களும் மறைபாக இருந்ததல்லவா. இப்பாட்டில் ஆறாயிரப்படியிலும் 24 ஆயிரப்படியிலும் மற்றுமுள்ள வ்யாக்யானங்களிலும் இதன்பெருமையைப் பரக்கத்தெரிந்து கொள்ளலாம்.

நாம் தத்காலம் பேசவந்த ஆழ்வார் மஹிமையை, சடகோபரந்தாதியில் கம்பநாட்டு ஆழ்வாரும் மேல் கூறியபடி இடைக்காடரைப்போலவே,

'துறவாதவற்குந் துறந்தவற்குஞ் சொல்லவே சுரக்கும்
அறவாவவையிங்கோராயிர நிற்கவந்தோ சிலர்போய்
மறைவாதியர் சொன்னவாசக மாமலட் டாவைப்பற்றிக்
கறவாக்கிடப்பாங் கெள்பறவோ தங்கள் கைவலிப்பே'

என்று கூறியிருக்கிறார்.

க்ருஹஸ்த தர்மத்திலிருப்பவர்களுக்கும், ஸந்யாஸிகளுக்கும் ஒதுமளவிலே தர்மார்த்தகாமமோக்ஷமாகிற நான்கு புருஷார்த்தங்களையும் மேன்மேலும் தருகிற பரமதர்மரூபமான ஓராயிரம் பசுக்கள்போன்ற நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியின் ஆயிரம் பாசுரங்கள் இவ்வுலகத்திலேயே இருக்கும்போது, ஐயோ, சிலர் இவற்றை விட்டு மாறுபாடுடைய வாதங்களைச்செய்வரான சைவரான மாணிக்கவாசகர் சொன்ன



திருவாசகமாகிய மலட்டுப் பசுவை பயன்தருவதாகக்கொண்டு கறந்துகொள்ள முயலுகிறார்கள். அப்படிச் சிரமப்படுவதில் அவர்களுக்குக் கைவலி எடுக்குமேதவிர வேறு ஒரு ப்ரயோஜனமும் உண்டாகாது.

கம்பநாட்டு ஆழ்வாரோ வைஷ்ணவராயிருந்தும் இதரதேவதைகளை அவருடைய க்ரந்தமாகிய கம்பராமாயணத்தில் பெருமைபடுத்தி இருக்கிறார். அவர் சைவத்வேஷியல்ல. ராமாயணத்தில்,

'அரனதிகனுலகளந்தவரிபதிக னென்றுரைக்கு மறிவிலோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோற்'

என்று சிவத்வேஷிகள் நல்லகதியை அடையமாட்டார்கள் என்று தாமே கூறியிருக்கிறார். அப்படியிருக்க, வாசகம் என்று திருவாசகத்தைக் குறிப்பிட்டு அது மலட்டாவென்றும், ஒதலுக விசேஷபயன் பலிக்காதென்றும், திருவாய்மொழியின் ஆயிரமும் ஆயிரம் கறவைப்பசுக்களென்றும் முமுக்ஷுக்களுக்கு மாத்ரம் உபாதேயமல்லாமல் ஸாதாரணமாய் காவ்யரஸாநுபவம் செய்யும் மாணுக்கர்களுக்கும் பக்திபுரஸ்ஸரமாய்ப் படிக்கும் ஆஸ்திகர்களுக்கும் அரும்சுவையும் நற்பயனும் ஆங்காங்கு லபிக்கச்செய்யுமென்றும் கூறியிருப்பது ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளின் பெருமையையே வற்புறுத்தலேயன்றி வேறு என்ன காரணம் சொல்லக்கூடும்.

(இன்னும்வரும்)

ஸ்ரீ:.

# ப்ராணாயாமம்.

(ஸ்ரீ. உ. வே. வே. க்ருஷ்ணமாசார்யர்.)

ப்ராணாயாமம் என்ற பதத்திற்கு ப்ராணவாயுவை அடக்குதல் என்று அர்த்தம். உள்ளிருக்கும் வாயுவை வெளியில் போகவிடாமலும் வெளியில் இருக்கும் வாயுவை உள்ளே வரவிடாமலும் தடுத்துக்கொண்டு ப்ராணவாயுவை உள்ளேயே அடக்கிக்கொள்ளுவதே ப்ராணாயாமம் என்று சொல்லப்படும். ப்ராணவாயு என்பது நமது தேகத்திற்குள் இருக்கும் வாயு. ப்ராண, அபாந, வ்யாந, உதாந, ஸமாந என்று ஐந்துவிதமாக விருக்கும். அவற்றுள் (1) ப்ராணவாயுவானது — ஹ்ருதய ஸ்தானத்தில் இருந்துகொண்டு நாம் உட்கொள்ளும் ஆஹாரம், தீர்த்தம் முதலானவைகளை உள்ளேவாங்கித் தகுந்த இடங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கும். இது மற்ற வாயுக்களை

விட முக்கியமானது. மற்ற இடங்களைவிட முக்கியமான ஹ்ருதயத்தில் வசிக்கிறது. வாய் வழியாயும் மூக்குகள் வழியாயும் வெளியில் வருவதும் உள்ளே போவதுமாயிருக்கும். (2) அபானவாயுவானது — நாபியின் கீழ் பாகங்களில் இருந்துகொண்டு மல மூத்ராதிகளை வெளிப்படுத்துகிறது. (3) வ்யானவாயுவானது — தேகம் முழுவதும் ஸஞ்சாரம் செய்துகொண்டு ரத்தம் முதலானவைகள் தேகம் முழுவதும் பரவும்படி செய்கிறது. (4) உதானவாயுவானது — கழுத்தில் இருந்துகொண்டு நாபியிலிருந்து ஸூக்ஷ்மமாக வரும் சப்தத்தை மேலே போகும்படி செய்து காதில் கேழ்க்கும்படி ஸ்பஷ்டமாகச் செய்கிறது. (5) ஸமானவாயுவானது — குடலின் சமீபத்தில் இருந்துகொண்டு நாம் உட்கொள்ளும் ஆகாரம் முதலானவைகளை ஜீர்ணம் ஆகும்படி செய்து பிறகு அவைகளின் ஸாரத்தை ரக்தம் முதலானவைகளாக மாற்றுகிறது. இவற்றுள் ப்ராணவாயு முக்கியமானதால் அதை அடக்கி நம்முடைய இஷ்டப்படி வெளியில் விடவும் உட்கொள்ளவும் பழக்கம் செய்துகொண்டால் சேனாபதியை யடக்கிவிட்டால் அவனுக்குள்ளடங்கிய சேனைகளும் அடங்குவதுபோல் மற்ற வாயுக்களும் நம்முடைய இஷ்டம்போல் நடக்கும். அப்படி பழக்கம் செய்வதற்கு ப்ராணாயாம் ஒன்றே முக்கியமான ஸாதனம். தேகத்திலுள்ள ப்ராணவாயுவானது ஸ்திரமாக இராமல் அலைந்துகொண்டே இருந்தால் நமது மனதும் அந்த வாயு பலத்தினால் ஸ்திரமாயிராமல் அலைந்துகொண்டே யிருக்கும். ப்ராணவாயு ஸ்திரமாயிருந்தால்தான் மனதும் ஸ்திரமாயிருக்கும். அதற்காகத்தான் ப்ராணாயாமம் பண்ணிக்கொண்டு ஈச்வர த்யானம் செய்யவேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. வைதிக ஸ்மார்த்த கர்மங்களை ஆரம்பிக்குமுன் ப்ராணாயாமம் பண்ணுவதும் அந்தந்த கர்மங்களைச் செய்யும்போது மனதை ஸ்திரமாகச் செய்துகொள்வதற்காகத்தான். ப்ராணவாயு எதுவரையில் தேகத்தில் இருக்கிறதோ அதுவரை உயிரோடிருக்கிறானென்றும் அது தேகத்தைவிட்டு முழுவதும் வெளிக்கிளம்பிவிட்டால் இறந்துவிட்டானென்றும் சொல்லுகிறோம். ஆகையால் உயிரோடிருப்பதும் இறந்துபோவதும் ப்ராணனின் ஸ்திதியைப் பொறுத்திருக்கிறது. நாம் தினந்தோறும் ப்ராணாயாமம் பண்ணிக்கொண்டேவந்து அந்த ப்ராணனை வசப்படுத்திக்கொண்டால் போகும் ப்ராணனை நிறுத்திக்கொள்ளவும் நினைத்தபோது தேகத்தைவிட்டு வெளிக்கிளப்பவும் நமக்கு சக்தியுண்டாகிறது. இதனால்தான் பூர்வகாலத்தில் அநேக மகாத்மாக்கள் வெகுகாலம் ஜீவித்திருந்தார்களென்றும் அநேகம் பேர்கள் நினைத்தபோது உயிரைவிட்டார்களென்



றும் புராணக்கதைகளில் கேழ்வைப்படுகிறோம். மேலும் ஒருவன் தன்னுடைய சக்தியை மீறி தேகத்திற்கு மிக ச்ரமம் உண்டாகும்படி காரியங்களைச் செய்வதால் அவருடைய ஆயுள் குறைவுபடுகிறது என்று கேழ்வைப்படுகிறோமல்லவா. அதுவும் ப்ராணவாயுவின் நிலைமையைப்பற்றினதே. தேக சக்தியை மீறிக் காரியங்களைச் செய்வதால் தேகத்தில் களைப்பு உண்டாகிறது. பெருமூச்சு வருகிறது. அதினால் ப்ராணவாயு அதிகமாக வெளிக்கிளம்புகிறது. ஒருவனுடைய ஆயுள்காலத்தில் இவ்வளவு சுவாசம் என்று ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவு சுவாசம் ஆனவுடன் மரணம் ஏற்படுகிறது. பெருமூச்சு, தும்பல், இருமல், கொட்டாய் இவைகள் உண்டாகும்போது ப்ராணவாயு அதிகமாய் வெளிக்கிளம்புவதால் ஏற்பட்ட சுவாசக்கணக்கு சீக்கிரத்தில் முடிந்துவிடுகிறது. அதற்காகத்தான் தும்பல், கொட்டாய் உண்டாகும் போதெல்லாம் பகவானை நினைப்பதும் குழந்தைகளுக் குண்டானால் 'தீர்க்காயுஸு' என்று ஆசீர்வதிப்பதும் பெரியோர்களின் வழக்கத்தில்வந்து கொண்டிருக்கிறது.

ப்ராணவாயு ஸ்திரமாயிருந்தால் மனதும் ஸ்திரமாயிருப்பது பற்றிதான் இந்த ப்ராணாயாமத்தை யோகத்திற்கு அங்கமாக யோகசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. யோகம் என்றால் மனதின் சஞ்சல ஸ்வபாவத்தை நிறுத்தி ஒரேவிஷயத்தில் ஸ்திரமாக வைப்பது என்று அர்த்தம். இந்த ப்ராணாயாமம் யோகத்தின் எட்டுவிதமான அங்கங்களில் ஒன்றாய் இருந்த போதிலும் இதுவே மற்றவைகளைவிட முக்கியமாக இருக்கும். மற்றவைகளில் சில இந்த ப்ராணாயாமத்திற்கு அங்கங்களாயும், சில இதனுடைய ப்ரயோஜனங்களாயும் இருக்கும். யமம், நியமம், ஆஸநம் ஆகிய இம்மூன்றும் ப்ராணாயாமத்திற்கு அங்கங்களாயும் ப்ரத்யாஹாரம், தாரணம், த்யானம், ஸமாதி ஆகிய இந்நான்கும் ப்ராணாயாமத்தின் ப்ரயோஜனங்களாயும் இருக்கின்றன. யமம், நியமம் ஆஸனம் என்ற மூன்று அங்கங்களையும் சரியாகத் தெரிந்துகொண்டு அதின் ப்ரகாரம் அநுஷ்டித்துக்கொண்டு ப்ராணாயாமம் செய்துகொண்டுவந்தால் ப்ரத்யாஹாரம் முதலான நான்கு ப்ரயோஜனங்கள் கிடைக்கின்றன. அவற்றுள் 'யமமாவது' பிறருக்கு ஹிம்ஸை செய்யாம லிருப்பது (2) உண்மை பேசுவது (3) பிறர்களுடைய சொத்தை ஆசைப்படாமலும் எடுக்காமலு மிருப்பது. (4) ப்ரஹ்மசர்ய வ்ரதத்துடன் இருப்பது (5) சுகத்தை உண்டு பண்ணக்கூடிய லௌகிக விஷயங்களில் பற்றுதலில்லாமலிருப்பது. தானாகவோ பிறர்கள் மூலமாகவோ பிறர்களுக்கு மனதால் தீங்கு நினையாமலும், வார்த்தையால் மனதைத் துன்[illegible]

186746.

தேஹத்தால் கேடு விளைவிக்காமலும் இருந்து கொண்டுவந்தால் இவனுக்கு ஒருவரும் சத்துருவே ஏற்படமாட்டார்கள். இவனைக்கண்டு எல்லோரும் இவனுடன் நேசிக்க ஆசைப்படுவார்கள். இவனைக்கண்டமாத்திரத்தில் பிறவிமுதல் ஸ்வபாவ சத்துருக்களான பசுபுலிகளும், நாய் பூனைகளும், கூட தங்களுக்குள் ஒருவருக்கொருவர் ஏற்பட்ட த்வேஷத்தைவிட்டு மிகவும் ஸ்நேகத்துடன் ஒத்துவாழும். இந்த விஷயத்தைப்பற்றி அடிக்கடி புராணங்களிலும் காவ்யங்களிலும் கேழ்விப்படுகிறோம். மனதுக்கும் வார்த்தைக்கும் விரோதமில்லாமல் மனதில் உள்ளதையே பேசுவது உண்மை பேசுவதாகும். இதுமாத்திரமல்ல - தர்மபுத்திரர் அச்வத்தாமா இறந்தான் என்று சொன்னது போல் பிறர்களுக்கு வேறுவிதமான அர்த்தத்தைக் கொடுக்கும் வார்த்தைகளைச் சொல்லாமல் தான் நினைத்த உண்மையான விஷயத்தையே அறிவிக்கக்கூடிய வார்த்தையைச் சொல்லுவதும் சேர்ந்ததுதான் உண்மை பேசுவதாகும். இப்படி ஸத்யத்தையே பேசிக்கொண்டுவந்தால் இவனுடையவாயிலிருந்து வரும் வார்த்தைகளெல்லாம் ஸபலமாகும் ஒரு அரசனைப்பார்த்து நீ தரித்திரனாக ஆகவேண்டியது என்று சொன்னால் அவன் அப்படியே மகா தரித்திரனாக ஆய்விடுவான். ஒரு தரித்திரனைப்பார்த்து நீ ஒரு அரசனாக ஆகவேண்டியது என்று சொன்னால் அவன் அப்படியே ஸர்வலோகாதிபதியாகிய சக்ரவர்த்தியாக ஆய்விடுவான். த்ரிசங்கு ஸ்வர்க்கத்திற்கு ஏறினதும் நஹுஷன் மலைப்பாம்பாக விழுந்ததும் போதுமான நிதர்சனம். பிறர்களுடைய சொத்துக்களை ஆசைப்படாமலிருப்பதால் நினைத்தவுடனே நவரத்னங்களும் மற்றும் இதர த்ரவ்யங்களும் இவனிருக்கும் இடம்வந்து சேர்கின்றன. ப்ரஹ்மசார்யத்தை அனுஷ்டிப்பதால் வீர்யம் தைர்யம் சக்தி முதலானவைகள் விருத்தியாகின்றன. ப்ராக்ருதமான தேகம் முதலானவைகளில் பற்றுதல் இல்லாமலிருப்பதால் ஆவரணம் நீங்கி இவனுக்கு ஸ்வபாவத்தில் ஏற்பட்ட த்ரிகாலஜ்ஞானம் உண்டாகிறது. இந்தமாதிரி யமம் ஐந்து வகைப்பட்டிருக்கும்.

நியமமாவது:—1. தேகசுத்தி சித்தசுத்தி 2 கிடைத்ததைக் கொண்டுதிருப்தியடைதல். 3. வ்ரதம், நித்யகர்மங்கள் முதலியவைகளைத் தவறுதல் இல்லாமல் சரியாக அநுஷ்டித்தல் 4. வேதாந்த சாஸ்திரங்களாகிய உபநிஷத்து முதலான கிரந்தங்களைப் படித்தல் 5. ஈச்வரனைத் தியானம் செய்தல் என்று ஐந்து வகைப்படும். இவற்றுள் தேகசுத்தியை முக்கியமாகக் கவனிப்பதால் பிறருடைய தேகம் தன் மேல்பட சம்மதிக்கமாட்டான்,

(இன்னும்வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினைன்காவது வருஷத்திய அறிக்கை.

ஸபை. சென்ற வருஷத்தில் ஸபைக்கு 175 மெம்பர்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள். சென்ற இரண்டு வருஷங்களாக ஸபை வ்ருத்தியடைந்துவருவது அடியில் குறிக்கப்பட்ட ஸங்க்யையிலிருந்து வ்யக்தமாகும்.

| மெம்பர்கள். | 13 வது வருஷ ஆரம்பத்தில். | 14-வது வருஷ ஆரம்பத்தில். | 15-வது வருஷ ஆரம்பத்தில். |
|---|---|---|---|
| முதல் வகுப்பினர். | 58 | 82 | 70 |
| இரண்டாவது வகுப்பினர். | 285 | 401 | 588 |
| சாச்வத மெம்பர்கள். | 1 | 1 | 1 |
| ஆனரரி மெம்பர்கள். | 7 | 7 | 7 |
| ஆகமொத்தம். | 351 | 491 | 666 |

ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய அபிமானத்தால் தீபிகையின் ஐவேஜிலிருந்து ரூ. 500 சாச்வதபண்டுக்காக ப்ரத்யேகமாய் திருவல்லிக்கேணி கோஆபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடியில் ரூ. 100-க்கு ரூ. $6\frac{1}{4}$-விதம் வட்டிக்குப் போடப்பட்டிருக்கிறது. இவ்விதம் முதல்முதலில் சாச்வதபண்டு ப்ரத்யேகமாய் ஏற்பாடு செய்தது சென்ற இரண்டு வருஷத்தின் பரிச்ரமம். இந்த அப்யுதயம் உண்டானது ஸபைக்கு பகவத் க்ருபை இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. பகவானுடைய க்ருபையால் இது வ்ருத்தியடைய வேண்டும்.

ஸபைக்கு அத்யக்ஷராக இருந்த ஸ்ரீ. உ. வே. ராவ்பஹதூர் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும், ஸபைக்குப் போஷகராக இருந்த ஸ்ரீமான் வுப்பட்டூர் ஆழ்வார்செட்டிகாருவும் பரமபத மடைந்ததால் ஸபைக்கு மிகவும் நஷ்டம் உண்டாயிற்று. ஸபாத்யக்ஷர் ஸ்தானத்துக்கு ஸ்ரீ. உ. வே. கனம் ஜஸ்டிஸ் வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஸபாத்யக்ஷரானதும் பகவானுடைய க்ருபையால் லௌகிகத்தில் உன்னத ஸ்தானமாகிய ஹைகோர்ட்டு ஜட்ஜி ஸ்தானத்தை அடைந்திருக்கிறார். இந்த விஷயத்தில் ஸபையோர் தங்களுடைய ஸந்தோஷத்தைக்காட்ட திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதியில் 14-9-1924-ல் திருக்கூட்

டம்கூடி அந்த ஸ்வாமிக்கு ஸ்வாகத நிவேதனம்செய்து, ஸத்காரமும் செய்தார்கள். இது ஸபையின் ஸாவியான ச்ரேயஸ்ஸுக்கு ஸூபஸூசகம் என்று நம்புகிறோம்.

**வார்ஷிகமஹாஸங்கம்.** 1923ஹு டிசம்பர்மீ'த்தில் சென்னையில் ஆழ்வார்செட்டியார் ராமாநுஜ கூடத்தில் பதின்மூன்றுவது வார்ஷிக ஸங்கம் நடைபெற்றது. ஸபையின் மூன்று தினங்களிலும் ஏராளமாய் ஸ்வாமிகள் எழுந்தருளி அலங்கரித்தார்கள். இந்த ஸதஸ்ஸின் விமர்சையைப்பற்றி வேதாந்ததீபிகை 14-வது ஸம்புடம் 4-வது ஸஞ்சிகையில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கிறது. ராமாநுஜ கூடத்தையும் கொடுத்து, ததீயாராதனம் செய்வித்து ஏராளமாய் த்ரவ்யஸஹாயம் செய்து ஸபையை நடத்திவைத்த ஸ்ரீமான் வுப்பட்டூர் ஆழ்வார் செட்டிகாரு, திருப்பதி ஸ்ரீமஹந்து அவர்கள், இன்னும் த்ரவ்யஸஹாயம்செய்த கனதனவான்களுக்கும் ஸபையோருடைய வந்தனங்களைச் செலுத்துகிறோம். சென்ற வருஷத்தைக்காட்டிலும் இவ்வருஷம் ஸ்வாமிகள் விலக்ஷணமாய் ஸேவை ஸாதித்தது, நாட்டில் ஆஸ்திக்யம் அதிகமாகி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**வேதாந்ததீபிகை.** இந்தப்பத்ரிகைக்கு சென்ற நான்குவருஷ காலமாகப் பத்ராதிபராக இருந்து அநந்ய ப்ரயோஜனராக வேலைபார்த்துவந்த நடாதூர். ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி சென்ற புரட்டாசி மாஸத்துடன் விலகிக்கொண்டார். கமிட்டியார் அவருடைய ராஜீநாமாவை மிகவும் வருத்தத்துடன் அங்கீகரித்து அந்த ஸ்வாமியால் செய்யப்பட்ட உபகாரத்துக்கு கமிட்டியார் தங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொண்டார்கள். வரப்போகிற வார்ஷிக மஹாஸங்கம்வரையில் கார்யதர்சி எடிட்டர் வேலையை சேர்த்துப் பார்த்துவரும்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தீபிகைக்கு விஷய ப்ரதானம் செய்துவந்த ஸ்வாமிகளுக்கு ஸபையோருடைய க்ருதஜ்ஞதையை வந்தனபூர்வகமாகத் தெரிவிக்கிறோம். தீபிகையை தமிழ் ஜில்லாவிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் வேறு இடங்களிலுள்ள தமிழ் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அபிமானித்து ஆதரித்தால் எவ்வளவோ நல்ல கார்யங்களைச் செய்யலாம். ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தீபிகையை வாங்கி ஸமூஹ கைங்கர்யத்தைச் சிறப்பாகத் தலைக்கட்டி வைக்கும்படி ப்ரார்த்திக்கப்படுகிறது.

சென்ற வருஷத்தில் அநேக மடாதிபதிகளுக்கு தீபிகைக்கு ஸஹாயம் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தனாபத்ரங்கள் அனுப்பப்பட்டதில் ஸ்ரீ அஹோபிலமடத்திலிருந்து ரூ. 25 ஸஹாயம் செய்யப்பட்டது. மேன்மேலும் த்ரவ்யஸஹாயத்தை வருத்தி செய்வதாயும் ஸ்ரீமுகம் கிடைத்தது. ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக கேத்பாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமிக்கு ஸபையின் க்ருதஜ்ஞதையைச் செலுத்துகிறோம். இதுபோல் மற்ற மடாதிபதிகளும் த்ரவ்யஸஹாயம் செய்தால் உபகாரமாக இருக்கும்.



சென்ற வருஷம் அநேகம் மெம்பர்கள் பரமபதித்துவிட்டதால் ஸபைக்கு அதிக நஷ்டம் நேர்ந்தது. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ. உ. வே. S. R. தேசிகாசார்யர் அநேகம் ஸ்வாமிகளை மெம்பர்களாக சேர்த்து உதவி செய்துவந்தார். அவர் பரமபதித்ததால் ஸபைக்கு நிரம்பவும் நஷ்டம் உண்டாயிற்று.

ஸபைக்கு மெம்பர்களைச் சேர்த்தும் இன்னும் பலவிதமான உபகாரங்களைச் செய்துவரும் பின்வரும் ஸ்வாமிகளுக்கு ஸபையோருடைய வந்தனங்கள் ஸமர்ப்பிக்கப்படுகின்றன:—

ஸ்ரீ. உ. வே. செல்லமய்யங்கார், சேலம்; ஸ்ரீ. உ. வே. M. T. ஸ்ரீரங்காசார்யர், பங்களூர்; ஸ்ரீ. உ. வெ. N. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அய்யம்பேட்டை; ஸ்ரீ. உ. வெ. P. A. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், ஸ்ரீரங்கம்; ஸ்ரீ. உ. வெ. V. K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தர்மபுரி; ஸ்ரீ. உ. வெ. P. D. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஆடுதுறை; இவர்களைப்போல் மற்ற ஊர்களிலும் யாராவது ஸ்வாமிகள் ச்ரத்தை எடுத்துக்கொண்டு மெம்பர்களைச் சேர்த்துக் கொடுத்தால் மிகவும் உபகாரமாக இருக்கும்.

தீபிகாபிமானியான ஸ்ரீமான் C. ஸுந்தரமய்யர் என்பவர் தீபிகையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், திருவாய்மொழியின் பெருமையைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதும்படி செய்வித்து, அதைப்படித்து ஜனங்கள் திருவாய்மொழியைப் படிக்கவேணுமென்று ஆஸ்தை கொள்ளவேண்டுமென்றும் ரூ. 30 ஸம்மானம் செய்து ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் வித்வான் பண்டிதபூஷணம் பகவத்விஷயம் நரஸிம்மாசர்யர் ஸ்வாமியை எழுதும்படி ப்ரார்த்தித்து நம் ஸபைக்கு ஒரு பெரிய கைங்கர்யத்தைச் செய்துவைத்தார். இந்த மஹானுக்கு ஸபையின் வந்தனங்களைச் செலுத்துகிறோம்.

மேலே குறிக்கப்பட்ட மெம்பர்களுக்குத் தவிர மடாதிபதிகள் முதலியவர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தீபிகை இனாமாக அனுப்பப்பட்டு வருகிறது. நமக்கு வரும் பத்ரிகைகளுக்கு ப்ரதியாக அந்தந்த பத்ராதிபர்களுக்கும் தீபிகை அனுப்பப்பட்டுவருகிறது.

**நிர்வாஹ கமிட்டி:**—இவ்வருஷம் நடாதூர் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி கமிட்டியை விட்டு விலகிக்கொண்டார். கமிட்டியார் இந்த வருஷத்தில் 10-க் கூட்டங்கள் கூடி ஸபையின் கணக்குகளை பரிசீலித்தது

ஸபையின் கார்யங்களின் நடத்தவேண்டிய முறைமையை யோஜித்தும் நடத்திவந்தார்கள்.

உபந்யாஸங்கள் —மேலப்பாளயம் ஸ்ரீ. உ. வே. எம். ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி ஸபைக்குக் கொடுப்பதாகச் சொன்ன ரூ. 1500-யும் ஒரு இடத்தில் வட்டிக்குப்போட்டு, அந்த வட்டியைக்கொண்டு ப்ரதிவருஷம் ஏதாவது ஒரு தமிழ் ஜில்லாவில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆஸ்திக்யம் அதிகரித்து, பக்தி உண்டாகி, அவர்கள் முன்னுக்கு வருமாறு ஒரு வித்வானைக்கொண்டு உபந்யாஸம் செய்விக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை அந்த ஸ்வாமி ஒரு இடத்தில் வட்டிக்குக் கொடுத்திருக்கிறார். அதற்குறிய காலம் பூர்த்தியானவுடன் வட்டியுடன் தொகையை ஸபைக்கு அனுப்பிவிடுவதாக எழுதி இருக்கிறார்.

ராவ்ஸாஹிப் டில்லி ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸ அயயங்கார் ஸ்வாமி செய்துவரும் த்ரவ்ய ஸஹாயத்தால் தஞ்சாவூர் ஜில்லாவில் தஞ்சாவூருக்கு வடக்கிலுள்ள பத்து க்ராமங்களில் ஸ்ரீ உ. வே. நெடுந்தெருவு ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியையும், தஞ்சாவூருக்குத் தெற்கிலுள்ள பத்து க்ராமங்களில் ஸ்ரீ. உ. வெ. காடந்தேத்தி கோபாலாசார்ய ஸ்வாமியையும் உபந்யாஸம் செய்யும்படி ப்ரார்த்தித்து, அந்த ஸ்வாமிகளும், கொட்டையூர், ரகுநாதபுரம், ஸரபோஜி ராஜபுரம், பாபநாசம், நீடாமங்கலம், மாளாபுரம், நடுவக்கரை, கல்யாணபுரம், பௌண்டரீகபுரம், தென்சருக்கை, நாகபட்டணம், பட்டுக்கோட்டை, திருவாலூர், மன்னார்கோவில், திருக்கண்ணமங்கை, தஞ்சாவூர், கல்யாணமஹாதேவி, கமலாபுரம் முதலிய இடங்களில் உபந்யாஸம் செய்தார்கள். இவர்களுடைய உபந்யாஸங்களால் அவ்விடங்களிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆஸ்திக்யம் அதிகமாகி, சிலர் மெம்பர்களாகவும் சேர்ந்திருக்கிறார்கள். இப்படி த்ரவ்ய ஸஹாயம் செய்த டில்லி ஸ்வாமிக்கு ஸபையோரும், இன்னும் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் மிகவும் க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்படி த்ரவ்ய ஸஹாயம் ப்ரபுக்கள் செய்தால் ஒவ்வொரு ஜில்லாவிலும் உபந்யாஸங்கள் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

## ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மானம்.

1922 - 1923ஆம் ஸம்மானம் ரூ. 15-ம் சாந்தோக்ய உபநிஷத் வித்யைகளைப்பற்றி எழுதி அனுப்பிக்கப்பட்ட வ்யாஸங்களில் ச்லாக்யமென்று தீர்மானிக்கப்பட்டதை எழுதின ஸ்ரீ. உ. வே. காடந்தேத்தி கோபாலாசார்யருக்குக் கொடுக்கப்பட்டது.



## வரவு, செலவு, கணக்கு.

| வரவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| சென்ற வருஷம் இருப்பு | 790 | 11 | 11 |
| தீபிகைச் சந்தா வரவு | 1860 | 4 | 0 |
| மறுபதிப்பு விற்பனை | 15 | 15 | 0 |
| காகிதம் அச்சுக்கூலி வஸூலித்து வரவு | 57 | 14 | 0 |
| விளம்பரம் | 3 | 0 | 0 |
| வ்யாஸ ஸம்மானத்துக்கு வரவு | 16 | 0 | 0 |
| அச்சாபீஸுக்குக் கொடுத்த அட்வான்ஸ் வரவு | 40 | 0 | 0 |
| உபந்யாஸ பண்டுக்கு | 200 | 0 | 0 |
| வார்ஷிக ஸங்கத்துக்கு வரவு | 586 | 0 | 0 |
| ஸ்டோரில் போட்டிருக்கும் பணத்துக்கு வட்டி வரவு | 10 | 4 | 7 |
| உபயோகமற்ற காகிதம் விற்ற வரவு | 3 | 7 | 0 |
| மொத்தம் | 3583 | 8 | 6 |

| செலவு. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| அச்சுக்கூலி | 759 | 12 | 6 |
| காகிதம் | 535 | 9 | 6 |
| விஷயப்ரதானம் செய்தவர்களுக்கு ஸம்மானம் | 190 | 0 | 0 |
| எழுத்துக்கூலி | 20 | 10 | 8 |
| ஸ்டேஷனரி | 27 | 12 | 6 |
| புரூப் பார்த்ததற்கு | 24 | 0 | 0 |
| வ்யாஸ ஸம்மானம் | 20 | 0 | 0 |
| போஸ்டேஜி | 250 | 9 | 6 |
| உபந்யாஸம் செய்த ஸ்வாமிகள் ஸம்பாவனை | 100 | 0 | 0 |
| வித்வத்ஸதஸ்கூட்ட செலவு | 250 | 13 | 9 |
| வித்வத் ஸம்பாவனை | 322 | 0 | 0 |
| தீபிகைகளை ஒட்டி தபாலில் போட | 60 | 0 | 0 |
| அத்யக்ஷரின் ஸத்காரத்திற்கு | 20 | 0 | 0 |
| சில்லரை கூலிகள் | 16 | 7 | 9 |
| ஆடிட்டுக்கு செலவு | 6 | 0 | 0 |
| பைண்டிங்கு | 3 | 4 | 0 |
| தந்தி | 1 | 9 | 0 |
| வண்டி வாடகைகள் | 20 | 12 | 2 |
| மொத்தம் | 2629 | 5 | 4 |
| பாக்கி இருப்பு | 954 | 3 | 2 |

இதன் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| சாச்வதபண்டு | 500 | 0 | 0 |
| டில்லி ஸ்வாமி பண்டு | 272 | 13 | 0 |
| பி. ஆர். கே. ஸ்வாமி பண்டு | 5 | 0 | 0 |
| வித்வத்ஸதஸ் பண்டு | 24 | 13 | 6 |
| வேதாந்த தீபிகை பண்டு | 151 | 8 | 8 |
| மொத்தம் | 954 | 3 | 2 |

கணக்குபரிசோதனை. இந்தவருஷத்தின் கணக்குகளைப் பரிசோதிக்க ஸ்ரீமான் K. R. ராமாநுஜ அய்யங்காரை கேட்டுக்கொள்ளும்படி கமிட்டியில் தீர்மானம் செய்ததின் ப்ரகாரம் அந்தஸ்வாமியை ப்ரார்த்தித்து, அவரும் கணக்குகளைப் பரிசோதித்து அவருடைய ரிபோர்ட்டும் இத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

S. கோபாலஸாமி அய்யங்கார்,
ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார்,
கார்யதர்சிகள்.

## ஆடிட் ரிபோர்டு,

ஸ்ரீவைஷ்ண ஸித்தாந்த ஸபையின் கார்யதர்சிக்கு

ஐயா,

எக்ஸிக்யூடிவ் கமிட்டியார் வேண்டுகோளுக்கு இணங்கி சென்ற ஸெப்டம்பர்மீ 30உ உடன் முடிவான ஸபையின் பதினான்காவது வருஷத்திய கணக்குகளை கவனமாய் பரிசோதித்தேன். என்னுடைய அபிப்ராயத்தை இதில் தெரிவிக்கிறேன்.

வௌசர்களுடன் கணக்குகளை கவனமாய் பரிசோதித்தேன். எல்லாம் த்ருப்தி கரமாகவும் ஸரியாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

கையிருப்பாகிய ரூ. 954-3-2-ல் ரூ. 500, திருவல்லிக்கேணி கோஆபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடியில் வருஷம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 6¼ விதம் பிக்ஸெட் டிபாஸிட்டாக போடப்பட்டிருப்பது ஸபைக்கு ஒருவருமானத்தை உண்டுபண்ணியிருக்கிறது. ஒருவருஷகாலத்தில் இவ்வளவு சேர்த்து வட்டிக்குப் போட்டிருப்பது மிகவும் ப்ரசம்ஸிக்கத்தக்கது. பாக்கி இருக்கும் தொகை ரூ. 100-க்கு ரூ. 3-வட்டிவரக்கூடிய கர்ரண்டு அக்கவுண்டில் போடப்பட்டிருக்கிறது. தாங்கள் எனக்குக் கணக்குகளைப் பரிசீலனம் செய்ய கணக்குப் புஸ்தகங்களைக்கொடுத்து வேண்டிய ஸௌகர்யங்களைச்செய்து கொடுத்ததற்கு, தங்களுக்கு என்னுடைய வந்தனங்களை அளிக்கிறேன்.

புரசைவாக்கம்,
23—11—1924.

ஒப்பம். K. R. ராமாநுஜ அய்யங்கார்,
ஆடிட்டர், போஸ்டல் அக்கவுண்டாபிஸ், மதராஸ்

ஸ்ரீ:

# சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

# பதினான்காவது வார்ஷிக மஹாஸங்கம்.

## தினசரி க்ரமங்கள்.

[குறிப்பு.—உபந்யாஸங்களுக்காகக் குறிப்பிட்டிருக்கும் ¾ - மணியில் ½ - மணி உபந்யாஸத்திற்காகவும், ¼ - மணி உபந்யாஸ விஷயமாய் அக்ராஸநாதிபதியின் அனுமதியின்பேரில் சர்ச்சை செய்வதற்கும்].

ரக்தாக்ஷி௵ மார்கழிமீ 15உ (29—12—1924) திங்கள் கிழமை.

காலை 9-மணி முதல் 11-மணிவரை.

9—9. 30 (1) ஸத்கார ஸபையோரின் ஸ்வாகத நிவேதனம்.
9. 30—10 (2) அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.
10—10. 45 (3) உபந்யாஸம் — மதுரையும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமும், ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம், பகவத்விஷயம் சேட்டலூர் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி.

மாலை 2-மணி முதல் 5-15-மணி வரை.

2—2. 30
(1) முதல் தீர்மானம் — ஸபாத்யக்ஷராயிருந்த ராவ்பஹதூர் ஸ்ரீ. உ. வே. எஸ். ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும், ஸபைக்குப் போஷகராயிருந்த ஸ்ரீமான் வுப்பட்டேர் ஆழ்வார் செட்டிகாருவும் பரமபதமடைந்ததைப் பற்றியது.
(2) இரண்டாவது தீர்மானம் — ஹிந்துமத ஸ்தாபன மசோதாவைப் பற்றியது.

2. 30—3. 15 (3) உபந்யாஸம் — பாஞ்சராத்ர ப்ராமாண்யம்—ஸ்ரீ. உ. வே. இஞ்ஜிமேடு ரங்கநாதாசார்யர் ஸ்வாமி.
3. 15—4 (4) ,, — ஜீவாத்மா தேஹமாயும், பரமாத்மா அந்தர்யாமியாகவுமிருக்கும் தத்வமும், அதன் ப்ரயோஜனங்களும்—ஸ்ரீ. உ. வே. கொடைவாசல் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி.
4—5. 15 (5) ,, — நம்மாழ்வாரிடம் கம்பநுடைய ஈடுபாடு—ஸ்ரீ. உ. வே. ரா. ராகவய்யங்கார் ஸ்வாமி.

மார்கழிமீ 16உ (30—12—1924) செவ்வாய்க் கிழமை.

காலை 8-மணிமுதல் 11-மணி வரை.

8—8. 45 (1) அங்கத்தினர்களின் வார்ஷிகக்கூட்டம் (Business meeting of the members).
8. 45—9. 30 (2) உபந்யாஸம்—கர்மங்களின் புண்யபாபங்களும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமும் — ஸ்ரீ. உ. வே. ரகுபதி ஆசார்யர் ஸ்வாமி.

9. 30—10.15 (3) உபந்யாஸம் — ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் ஸார்வ ஜனீந தத்வம்—ஸ்ரீ. உ. வே. ஸாது ராமாநுஜாசார்யர் ஸ்வாமி.

10. 15—11 (4) „ — ஸ்ரீ சங்கர ஸ்ரீராமாநுஜ பாஷ்யங்கள் - ஸ்ரீ. உ. வே. மஹாமஹோபாத்யாய, கபிஸ்தலம் தேசிகாசார்யர் ஸ்வாமி.

மாலை 2-மணி முதல் 5-15 மணி வரை.

2—2. 30 (1) மூன்றாவது தீர்மானம்—ஸபை, அதன் பத்ரிகையாகிய வேதாந்த தீபிகையின் அபிவ்ருத்தியைப் பற்றியது.

2. 30—3. 15 (2) உபந்யாஸம் — ஸ்ரீவைஷ்ணவர்களும் இதரதேவதைகளும்— ஸ்ரீ. உ. வே. வெங்கட சேஷாசார்யர் ஸ்வாமி.

3. 15— 4 (3) „ — ஸ்ரீவைஷ்ணவர்களின் ஐகமத்ய ஆவச்யகதை[B-L. ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர் ஸ்வாமி B-A

4—4. 45 (4) „ — உபயவேதாந்த ஐககண்ட்யம்—ஸ்ரீ. உ. வே. தேசிக வரதாசார்யர் ஸ்வாமி.

மார்கழிமீ 17உ (31-12-1924 புதன்கிழமை.

காலை 8-மணி முதல் 11-மணி வரை.

8. 8—45 (1) உபந்யாஸம் — ஆழ்வார்களும் அர்ச்சாவதாரமும், ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமி

8. 45—9. 30 (2) „ — ஸாத்விக த்யாகம்—ஸ்ரீ. உ. வே. தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்யர் ஸ்வாமி.

9. 30—10-15 (3) „ — ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதி—ஸ்ரீ. உ. வே. வங்கீபுரம் நவநீதம் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி.

10. 15—11 (4) „ — ஸமாச்ரயணம்—ஸ்ரீ. உ. வே. வடபத்ரசாயி அய்யங்கார் ஸ்வாமி.

மாலை 2-மணி முதல்.

2. 2—30 (1) நான்காவது தீர்மானம்—நம்ஸம்ப்ரதாயம் வ்ருத்தி அடையும்படி செய்வதைப்பற்றியது.

2. 30—3. 15 (2) உபந்யாஸம் — தசாவதார ரஹஸ்யம்-ஸ்ரீ. உ. வே. அன்பில் எ. வி. கோபாலாசார்யர் ஸ்வாமி M. A. B. L.

3. 15—4 (3) „ — ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆஹ்நிக க்ருத்யங்கள்— ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல தாதாசார்யர் ஸ்வாமி

4—4. 30 (4) ஸம்பாவனை.

4. 30—5 (5) அக்ராஸனாதிபதியின் முடிவுரை.

5—5. 30 (6) வந்தனமளித்தல்.

---



'க்ருதவாம்ஶ்சாபி விஷ்ணும் பரம் த்யாயதி' இத்யாதிபி: கர்மாங்கத்வஸ்ய ஸித்தத்வாச்ச । 'ப்ரியத்வாச்ச' இத்யஸ்ய ஸந்திக்தே விஷயே மஹதாம் மந:ப்ரவ்ருத்தி: ப்ரமாணமித்யபிப்ராயேண தாத்பர்யாச்ச । உக்தஞ்ச மஹாகவிபிர் மீமாம்ஸகைஶ்ச — 'ஸதாம் ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு ப்ரமாணம் அந்த:கரண ப்ரவ்ருத்தய:'' இதி । 'ஹேதுத்வாச்ச ஸத்விதே:' இத்யாதிகஸ்யாபி ஶாஸ்த்ராநுஸாரேண ஸதஸத்விவேகஹேதுத்வபரத்வேந நாதிப்ரஸங்காச்ச । 'ஶ்ராவணாச்ச கிங்கரைஶ்ச' இத்யாதிகஸ்யாபி ப்ராக்ப்ரதர்ஶித யமகிங்கரஸம்வாதாதிபி: ஸித்தத்வாச்ச ।

அத: ஸித்தம் ப்ராஹ்மணாதிபி: ஸுதர்ஶநாதிகதாரணம் அவஶ்யம் கார்யம், முமுக்ஷுபிர் விஶேஷத இதி ।

ஸ்ரீமத்வேங்கடநாதேந ஸம்யகேதத் ஸமர்த்திதம் ।
ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸாதி ஸித்தம் சக்ராதிதாரணம் ॥

---

துக்கொண்டவனாய் எல்லாத்தேவதைகளையும்விட உயர்ந்தவனாகிய விஷ்ணுவை த்யானம் செய்கிறானோ' என்றிவைமுதலிய வாக்யங்களினால் கர்மங்களுக்கு அங்கமென்பது ஸித்தமாயிருப்பதினாலும்; 'ப்ரியமாயிருப்பதினால்' என்பதற்கும் ஸந்தேஹப்படுகிற விஷயத்தில் பெரியோர்களினுடைய மனதின் ப்ரவ்ருத்தியே ப்ரமாணமாகுமென்று சொல்லுவதில் தாத்பர்யமாதலாலும், அப்படியே மீமாம்ஸகர்களினாலும் மகா கவிகளினால் சொல்லப்பட்டிருக்கிறதென்று 'ஸந்தேஹத்திற்கு இடமான வஸ்துக்களில் பெரியோர்களின் மனதின் ப்ரவ்ருத்தியே ப்ரமாணமாகும்' என்று எடுக்கப்பட்டிருக்கிறது. 'நல்லதை அங்கீகரிப்பதற்குக் காரணமாதலால்' என்பது முதலியவற்றிற்கும் சாஸ்திரத்தை அனுஸரித்து நல்லது கெட்டதைப் பகுத்தறிவதற்குக்காரணம் என்று சொல்லுவதில் தாத்பர்யமாகையினாலே அதிப்ரஸங்கம் என்னும் தோஷம் இல்லாமையினாலும்; 'யமகிங்கரர்களை ஓடும்படிசெய்வதினால்' என்றிவை முதலியவையிற் காண்பிக்கப்பட்ட யமனுக்கும் அவனுடைய கிங்கரர்களுக்கும் ஏற்பட்ட ஸம்வாதம் முதலியவைகளில் காண்பிக்கப்பட்டிருப்பதினாலும்.

ஆகையினால் ப்ராம்மணன் முதலியவர்களினால் சக்ரம் முதலியவைகள் அவச்யமாய்த் தரிக்கத்தக்கது, மோக்ஷத்தில் ஆசையுடையவர்களினால் மிகவும் அவச்யம் தரிக்கத்தக்கது என்பது ஏற்பட்டது.

ஸ்ரீமத் வேங்கடநாதன் என்னும் ஆசார்யனால் ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸம் முதலியவைகளில் ஏற்பட்டதான சக்ரம் முதலியவைகளைத்தரிப்பது இவ்விதமாக நன்றாக ஸ்தாபிக்கப்பட்டது.

அயமநவமஸூக்தை: ஸாக்ஷிமத்பி: ப்ரயத்நாத்
ஸமவிதித நிஜசேதா விஷ்ணுஸம்பந்தஹேதோ: |
ப்ரஶமயதி ஸமஸ்தம் ஸஜ்ஜநாநாம் ஜநாநாம்
துரிதமயமநேஹா தேஹதோ தேஹஜேப்ய: ||

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ ஸ ச்ச ரி த்ர ர க்ஷா யா ம்
|| ஸுதர்ஶநபாஞ்சஜந்யதாரணவிதிர் நாம ப்ரதமோऽதிகார: ||

---

மிகவும் சிறந்த ஸூக்திகளையுடைய (செந்தமிழ் பாடுவார் என்கிற பெயருடைய) ஆதிபக்தர்களினால் (முதலாழ்வார்களினால்) [பாட்டுக்குரிய பழையவர் மூவர்' என்று இவர் தம்மாலேயே அருளிச்செய்திருப்பது இங்கு அநுஸந்தேயம்] உள்ளபடியே நன்றாய் அறியப்பட்ட தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை உடையவராயும் சக்ரத்தினால் உறுதியான அடையாளத்தை உடைய (சக்ராங்கனம் செய்துகொண்டவர்களான) ஜனங்களினுடைய பாபங்களைப் போக்கடிப்பதாகிய விளையாட்டில் ஆசையுடையவரான தேஹளீசன் (திருக்கோவலூர் க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்) ப்ரபஞ்சங்களை எல்லாம் அமங்களங்கள் ஒன்றுமில்லாமல் காப்பாற்றவேண்டும்.

ஸுதர்ஶந பாஞ்சஜந்யதாரண விதி என்னும்
முதல் அதிகாரம் முற்றிற்று.

|| ஸ்ரீ: ||
|| ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ||
|| ஊர்த்வபுண்ட்ரதாரணாதிகாரோ த்விதீய: ||

அயோக்ய மதிகாரணாம் ஊர்த்வபுண்ட்ரஸ்ய தாரணாத் |
திர்யக் புண்ட்ராதிஹாநம் ச ஶாஸ்த்ரை: ஸம்ஹித்யதே ||

ஸந்த்யத்ர பஹவ: ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதிவசாம்ஸி | தத்ர தாவந்மஹோபநிஷதி — "ஊர்த்வபுண்ட்ர: பரமேஶிதாரம் நாராயணம் ஸாங்க்யயோகாதிகம்யம் | ஜ்ஞாத்வா விமுச்யேத நர: ஸமஸ்தை: ஸம்ஸாரபாஶைரிஹ சைவ விஷ்ணும் ||" — இதி | ஊர்த்வபுண்ட்ரோ ஜ்ஞாத்வேத்யந்வய: | முமுக்ஷுணா நர: ஊர்த்வபுண்ட்ர: த்யாயேதிதி விதேய: | ஸாங்க்ய யோகாதிகம்யம் ஜ்ஞாநயோக கர்மயோகாப்யாம் பக்திஹ்வாராதிகம்யம் இத்யர்த: | நாராயண விஷ்ணுஶப்தயோ: ப்ரத்யேகஸ்ய ஸஞ்ஜ்ஞாத்வ நிர்வசந

---

|| ஸ்ரீ: ||
|| ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேஶிகாய நம: ||

ஊர்த்வ புண்ட்ரதாரணவிதி என்னும்
இரண்டாவது அதிகாரம்.

மிகவும் உயர்ந்த கதியை அடையவேண்டுமென்கிற ஆசையையுடையவர்களுக்கு ஊர்த்வ புண்ட்ரமே தரிக்கவேண்டுமென்பதையும், குறுக்காக இடும் புண்ட்ரங்களை விடவேண்டும்என்பதையும் சாஸ்திரங்களைக்கொண்டு நிரூபிக்கிறோம்.

இந்த விஷயத்தில் அநேகம் ஶ்ருதிகளும், ஸ்ம்ருதி, இதிஹாஸம் முதலியவைகளில் சொல்லியிருக்கும் வசனங்களும் இருக்கின்றன. அதில் முதலில் மஹோபநிஷத்தில் 'ஊர்த்வ புண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டு ஜ்ஞான யோகங்களினால் அறியத்தக்கவனாகிய எல்லாவற்றிற்கும் ஈஶ்வரனாய் நாராயணன் என்று சொல்லப்படுகிற விஷ்ணுவை த்யானம் செய்துகொண்டு மனிதன் ஸம்ஸார பந்தங்கள் எல்லாவற்றாலும் விடப்படுகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஊர்த்வ புண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டிருந்து த்யானம் செய்து என்று அந்வயித்துக்கொள்ளவேண்டும். (ஆகவே) மோக்ஷத்தில் ஆசையுடைய மனிதன் ஊர்த்வ புண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டே த்யானம் செய்யவேண்டும் என்று விதிப்பதில் தாத்பர்யம் ஏற்படுகிறது. 'ஸாங்க்யயோகாதிகம்யம்' என்பதற்கு ஜ்ஞானயோகம் கர்மயோகம் இவைகளினால் பக்தி யோகத்தின் வழியாக அடையத்தகுந்தவன் என்றர்த்தம். 'நாராயண', 'விஷ்ணு' என்கிற பதங்களுக்குள் ஒன்று பெயர் என்பதும், மற்றொன்று நிர்வசனங்களில் சொல்லப்படுகிற தாத்பர்யத்தைச் சொல்லித்

विवक्षया विशेषणवाचकं वा स्याद्वाक्यम् । "शुभाशुभैः संसारपाशै" रिति बन्धहेतुभूतैः पुण्यपापरूपैः कर्मभिः तद्धेतुभूतै रागादिभिश्चेत्यर्थः । 'इहैव विमुच्यते' इत्येतस्य "तदेवं विद्वानमृत इह भवति" इतिवत् तु उत्तरपूर्वाघयोरश्लेषविनाशादिवाचि सूत्रकारेणैव निर्णीतम् "अनारब्धकार्ये एव तु पूर्वे तदवधे" रित्यादिभिः । यथा "यः करोत्यूर्ध्वपुण्ड्रं तु सन्ध्यावन्दनकर्मणि । तेनाहं सर्वदा ब्रह्मन् प्राप्य एकेनैव जन्मनि", 'यावज्जीवं तु पुण्ड्रमूर्ध्वपुण्ड्रं दधाति यः । जन्मान्तरे दुर्लभं मुक्तिं सद्यः प्राप्नोति शाश्वतम् ॥' इत्याद्यानि ब्रह्माण्डस्थ ब्रह्माण्ड वचनानि

கொண்டு விசேஷணமாயிருக்கிறதென்பதும் அறியத்தக்கது. 'शुभैश्शुभैः संसारपाशैः' என்பதற்கு ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணங்களாகிய புண்யம் பாபம் இவைகளாகிற கர்மங்களினாலும் அவைகளுக்குக் காரணங்களான ஆசை முதலியவைகளினாலும் என்றர்த்தம். 'इहैव विमुच्यते' என்றது 'அவனே இவ்விதமாக அறிந்தவன் இந்த லோகத்திலேயே மோக்ஷத்தை அடைந்தவனாகிறான்' என்றிவை முதலிய வாக்யங்களைப்போல என்றபடி. அதுவும் பக்தி செய்தபிறகு உண்டாகிற கர்மங்கள் இவனிடத்தில் ஒட்டுகிறதில்லை என்பதையும் முன்னால் செய்த கர்மங்களும் நசித்துவிடுகின்றன என்பதையும் சொல்லுகிறது என்பது ஸூத்திரக்காரரால் 'அர்ச்சிராதி கதிக்கு ஆரம்பமாகிய நாடியில் ப்ரவேசிக்கும் வரையில் பக்தியோகம் செய்பவன் செய்யாதவன் இருவருக்கும் பொதுவானது, பக்தியோகம் செய்பவன் இங்கேயே மோக்ஷத்தை அடைகிறான் என்று ச்ருதியில் சொல்லி இருப்பதும் சரீரம் முதலியவைகள் விடாமல் இருக்கும்பொழுதே இனி செய்யப்போகிற கர்மங்கள் ஸம்பந்தப்படாமல் இருக்கையையும் முன்செய்த கர்மங்கள் நசித்து விடுகையையும் சொல்லுகிறது' என்றிவை முதலிய ஸூத்திரங்களில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அன்றிக்கே 'எவன் ஸந்த்யாவந்தனம் முதலிய கர்மங்களைச் செய்யும்பொழுது ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்கிறானோ, ஓ! ப்ரும்மாவே, அவனால் நான் ஒரு ஜன்மத்திலேயே ஸுகமாய் அடையக்கூடியவனாவேன்', 'எவன் ஜீவன் உள்ளவரையில் ஊர்த்வ புண்ட்ரம் என்கிற இந்த புண்ட்ரத்தைத் தரிக்கிறானோ அவன் அப்பொழுதேயாவது அடுத்த ஜன்மத்திலேயாவது ஒருவராலும் அடையமுடியாத மோக்ஷத்தை அடைகிறான்' என்றிவை முதலிவைகளாய் ஶ்ருதியில சொல்லப்படுகிற அர்த்தங்களை விவரிக்கிற ப்ரும்மாண்ட புராணத்தில் சொல்லப்படுகிற வசனங்களை அனுஸரித்து



सारेण अनेनैव जन्मनि मोक्षसाध्यत्वम् । यथा 'जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः । त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥' इति श्रीमदवताररहस्यतत्त्वविज्ञानस्य शीघ्रं सर्वविरोधिनिवर्तकत्वेन संपूर्णविद्यानिष्पत्तौ एकेनैव जन्मनि मोक्षसाधकत्वम्, तथा च वक्ष्यमाण मन्त्रध्यानादि विशिष्टोर्ध्वपुण्ड्रधारणस्य उपपादीति भाव्यम् इति ।

यावन्न विश्रान्तं ब्रह्माण्डादि ग्रन्थेषु तिष्ठत विस्तीर्ण-स्वादिना केषाञ्चित् संशयो वर्तते, सा तु न कर्तव्या — सर्वसंमत श्रुत्यादि विरोधाभावात्, अविरोधिनां च अनाप्तत्वकल्पने गौरवात्, अतिप्रसङ्गाच्च । तथा कठशाखायां "ऊर्ध्वपुण्ड्राः कृतवक्त्राः" इत्यारभ्य श्रीसुदर्शनपाञ्चजन्य धारणाधिकारे सर्वं व्याख्यातः । तथा नारदीय संहिता

இந்த ஒரு ஜன்மத்திலேயே மோக்ஷத்தை அடைகிறான் என்பதில் தாத்பர்யத்தையுடையதாகவுமாம். எப்படி 'என்னுடைய அவதாரத்தையும் அதில்செய்யப்பட்ட வ்யாபாரங்களையும் கீழ்ச்சொல்லிய விதமாக ப்ரக்ருதி ஸம்பந்தமற்றதென்று உண்மையாக எவன் அறிகிறானோ, ஓ! அர்ஜுந, அவன் இந்தத் தேஹத்தைவிட்டு மறுபடியும் ஜன்மத்தை அடைவதில்லை, என்னையே அடைகிறான்' என்கிறபடியே ஸ்ரீ அவதார ரஹஸ்யத்தின் உண்மையை அறிவதற்குசீக்கிரத்தில் எல்லா விரோதிகளையும் போக்கடிக்கிறபடியினால் ப்ரும்மவித்யை பூர்ணமாக நிறைவேறி ஒரே ஜன்மத்தில் மோக்ஷத்தை அடைவதற்குக் காரணமாகும் தன்மையுண்டோ அப்படியே மேலே நிருபிக்கப்படுகிற மந்திரம் த்யானம் முதலியவைகளுடன் கூடிய ஊர்த்வ புண்ட்ரத்தை எப்பொழுதும் தரித்துக் கொண்டிருப்பதற்கும் (அவ்விதமான) தன்மை உண்டென்று அறியத்தக்கது.

இப்பொழுது சிலருக்கு ப்ரும்மாண்ட புராணம் முதலிய க்ரந்தங்களில் அவைகள் மிகவும் விஸ்தாரமாயும் சிதறியும் இருப்பது முதலிய காரணங்களினால் ஸந்தேஹம் உண்டாகி இருப்பதும் இந்த விஷயத்தில் செய்யத்தக்கதல்ல— ஏனெனில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற வேதம் முதலியவைகளுக்கு விரோதம் இல்லாமையினாலும், அப்படி விரோதம் இல்லாதவைகளும் நம்பத்தக்கவைகளல்ல என்று கல்பிப்பதில் கௌரவமும் அதிப்ரஸங்க தோஷமும் வருகிறபடியினாலும். அப்படியே கடசாகையில் 'ஊர்த்வ புண்ட்ரங்களைத் தரித்துக்கொண்டவனும் தாபம் செய்யப்பட்ட சக்ரத்தைத் தரித்துக்கொண்டவனும் இருந்து' என்றாரம்பிக்கும் மந்திரம் (இதிலேயே கீழ் நிருபிககப்பட்ட) ஸுதர்சந பாஞ்சஜந்ய தாரணவிதி என்னும் முதல் அதிகாரத்தில் முழுமையும் வ்யாக்யானம் செய்யப்பட்டது. அப்படியே நாரதிய ஸம்ஹிதையில் எழுபத்திநாலாவது அத்யாயத்தில் 'மற்றொரு

[illegible]

---

ச்ருதி ஊர்த்வ புண்ட்ரத்தை அப்படியே பகவானை ஆராதனம் செய்வதற்கு அங்கமாகச் சொல்லுகிறது' என்று சொல்லிவிட்டு காடக ச்ருதி ஒன்று உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. (அதாவது) 'ஊர்த்வ புண்ட்ரங்களைத் தரித்துக்கொண்ட எவன் எல்லாவற்றிற்கும் ஈச்வரனான நாராயணனை புருஷ ஸூக்தத்தில் சொல்லப்படுகிற மந்திரங்களைக்கொண்டு அர்க்யம் முதலியவை களினால் பக்தியுடன் ஆராதனம் செய்தானோ, மஹாத்மாவாகிய அந்த மனிதன் விஷ்ணுவினுடைய ஸ்தானத்தை அடைகிறான்' என்றிவை முதலியவை சொல்லப்படுகின்றன. இந்த வாக்யத்தில் ('யஃ, ஸஃ' என்கிற பதங்கள் இல்லாமற் போனபோதிலும்) 'எவன் பஜிக்கிறானோ அவன் விஷ்ணுவினுடைய ஸ்தானத்தை அடைகிறான்' என்று அந்தப் பதங்களைச் சேர்த்துக் கொண்டு அர்த்தம் சொல்லிக்கொள்ளவேண்டும். மற்றது ஸுலபமாயறியக் கூடியது. அந்த ஸம்ஹிதையிலேயே அறுபத்தொன்பதாவது அத்யாயம் முதல் சில அத்யாயங்களினால் இந்த அர்த்தம் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மேலே நிரூபிக்கவேண்டிய இடத்தில் நிரூபிக்கப்போகிறோம். அப்படியே வல்லப சாகையில் 'யஜ்ஞமூர்த்தியான பகவானுடைய ஆராதனம் முதலிய கார்யங்களில் ஊர்த்வ புண்ட்ரத்தை (தரிக்கவேண்டும்)' என்றாரம்பித்து 'அவன் ஏழு வம்சத்தாரைக் கரையேற விடுகிறான், தானும் பகவானுடைய ஸ்தானத்தை அடைவான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸம்ஹிதையிலேயே 'இதர தேவதைகளினிடத்தில் பக்தி உடையவனுக்கும் ஊர்த்வ புண்ட்ரம் மேன்மையைக் கொடுக்கக்கூடியதென்று 'இதர



[illegible]

---

தேவதைகளிடத்தில் பக்தி செய்துகொண்டிருப்பவர்களாய் எவர்கள் ஜபம் ஹோமம் முதலியவைகளைச் செய்கிறார்களோ அவர்களும் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டவர்களாய்' என்றாரம்பித்து ப்ரகாசமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே அதர்வண வேதத்தில் 'எவன் பகவானுடைய திருவடியின் ஆகாரம்போன்ற ஆகாரத்தை உடையதாயும், நடுவில் இடைவெளியை உடையதாயும் இருக்கிற ஊர்த்வ புண்ட்ரத்தைத்தனக்கு நன்மை உண்டாவதற்காகத் தரிக்கிறானோ, அவன் பகவானுக்கு ப்ரியனாகிறான், புண்யத்தைச் செய்தவனாகிறான், மோக்ஷத்தை அடைந்தவனாகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தினால் ஆகாரம் இன்னதென்று அதின் விசேஷம் விதிக்கப்பட்டிருப்பதினால் எல்லா வேதங்களிலும் சொல்லியிருக்கிற கர்மம் ஒன்றுதான் என்கிற ந்யாயத்தினாலே மற்ற ச்ருதிகளிலும் இதே ஆகாரம் விதிக்கப்படுகிறதென்று அறியப்படுகிறது.

இப்படிப்பட்ட ஊர்த்வ புண்ட்ரம் எல்லா ஜாதியாருக்கும் பொது, பாதி சந்திரனைப்போல் இடவேண்டியது என்பது முதலிய பேதங்கள் க்ஷத்திரியன் முதலியவர்களுக்கு மாத்திரம். அதிலும் வைஷ்ணவர்களுக்கு ஊர்த்வ புண்ட்ரம் தரிப்பதே அவச்யம் செய்யத்தக்கது. வைஷ்ணவர்களல்லாத ஸாமான்ய ப்ராம்மணர்களுக்கும் இந்த ஊர்த்வ புண்ட்ரமே தரிக்கத்தக்கது என்று வ்யக்தமாகச் சொல்லுகிறார்கள், எப்படி என்னில்:— அக்னிவேச்ய க்ருஹ்யத்தில் 'தெரிந்தவனாகிய ப்ராம்மணன் த்ரிபுண்ட்ரத்தை (அதாவது குறுக்காக மூன்று கோடுகள் இடுவதை) விளையாட்டினாலும் தரிக்கக்கூடாது, நன்றாகப் பரிசித்தனாய் ப்ரயத்னம் செய்

தாரயேத் ப்ரயத: ஸதோர்த்வபுண்ட்ரம் ப்ரயத்நத: ||" இதி | உக்தம் ச போதாயநேந—"ஹோமகாலே ஜபாதௌ ச ஸாயம் ப்ராத: ஸமாஹித: | ஊர்த்வபுண்ட்ரதரோ விப்ரோ பவேச்சுத்தோ ந சாந்யதா ||" இதி | சந்த்யேதி தேந த்ரிபுண்ட்ரதாரணே ஊர்த்வபுண்ட்ரதாரணம் ச நிஷித்யதே | ஸ்ம்ருதௌ ச வ்ருத்தஜாபாலிநா—"ஸஸ்த்ராயுதீ ச தந்வீ ச தநஹாரீ தநாபஹ: | திர்யக்புண்ட்ரதரோ விப்ர: ஸ சண்டாலஸமோ பவேத் ||" இதி | ஸாதாதபஸ்ச—"த்ரிபுண்ட்ரம் ப்ராஹ்மணோ வித்வாந் க்ரீடயாபி ந தாரயேத் | த்ரிபுண்ட்ரதாரணாத் விப்ர: பதிதோ நாத்ர ஸம்ஸய: ||," "யச்சரீரம் மநுஷ்யாணாம் ஊர்த்வபுண்ட்ரம் விநா பவேத் | த்ரஷ்டவ்யம் நைவ தத்தாவத் ஸ்மஸாநஸத்ருஸம் ஹி தத் ||" இதி | புராணேஷு ச மாத்ஸ்யே—"ந த்ரிபுண்ட்ரம் த்விஜ: குர்யாத் ததா பூஜாம் ததைவ ச" இதி | தத்ரைவ—"த்ரிபுண்ட்ரம் ப்ராஹ்மணோ வித்வாந் க்ரீடயாபி ந தாரயேத் | தாரயேத் ப்ரயத: ஸ

தாவது ஊர்த்வ புண்ட்ரத்தையே தரிக்கவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. போதாயனராலும் 'ஹோமம் பூஜை முதலியவைகளைச்செய்யும் ஸமயத்தில் ஸாயங்காலத்திலும் காலையிலும் ஸாவதானத்துடன் இருந்து ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற ப்ராம்மணன் பரிசுத்தனுவான், மற்றெவ்விதத்திலும் அப்படி ஆகமாட்டான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'சந்த்யா' என்பதினுல் த்ரிபுண்ட்ரத்தைத் தரிப்பதும் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்காமல் இருப்பதும் மறுக்கப்படுகிறது. வ்ருத்த ஜாபாலி 'ஆயுதம் எடுப்பவனும் கத்தியைத் தரித்துக்கொண்டிருப்பவனும் வில்லைத்தரித்துக் கொண்டிருப்பவனும் பணத்தை அபஹரிப்பவனும் திர்யக்புண்ட்ரத்தைத் தரித்துக்கொண்டு இருப்பவனுமான ப்ராம்மணன் சண்டாளனுக்கு ஸமமாவான்' என்று சொல்லுகிறுர். சாதாதபரும், 'தெரிந்தவனுகிய ப்ராம்மணன் திர்யக்புண்ட்ரத்தை விளையாட்டினுலும் தரிக்கக்கூடாது, ப்ராம்மணன் திர்யக் புண்ட்ரத்தைத் தரிப்பதினுல் பதிதனுகவே ஆகிறுன், ஸந்தேஹமில்லை,' 'மனுஷ்யர்களுடைய எந்தச் சரீரம் ஊர்த்வபுண்ட்ரமில்லாமல் இருக்குமோ அந்தச் சரீரம், பார்க்கத்தக்கதல்ல, ஏனெனில் ச்மசானத்திற்கு ஒப்பானதல்லவா' என்று சொல்லியிருக்கிறுர். புராணங்களில் மாத்ஸ்யபுராண[illegible]ணன் த்ரிபுண்ட்ரத்தை இடக்கூடாது, அப்படியே அ[illegible]பூஜைபண்ணவுங்கூடாது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே 'தெரிந்தவனுகிய ப்ராம்மணன் விளையாட்டினுலும் த்ரிபுண்ட்ரத்தைத்

186746

ஸ்ரீ:

## ராவ்ஸாஹிப் டில்லி ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் உபந்யாஸங்கள்.

இந்த ஸ்வாமியின் த்ரவ்ய ஸஹாயத்தால் தஞ்ஜாவூர் ஜில்லாவில் உபந்யாஸம் செய்யும்படி ப்ரார்த்திக்கப்பட்ட காடந்தேத்தி ஸ்ரீ. உ. வே. கோபாலாசார்யர் ஸ்வாமி கமலாபுரம் என்னும் ஊரில், சென்ற ஐப்பசிமீ 7உ (7-11-1924) யன்று பக்தி, ஸ்ரீ விசிஷ்டாத்வைதம், விவேகம், ஸ்ரீ வைஷ்ணவர்கள் தாழ்ந்த நிலைமைக்கு வந்திருக்கிறதையும் அதை முன்னுக்குக் கொண்டுவரும் ப்ரகாரம், விவேகம் என்னும் விஷயங்களைப்பற்றி எல்லோரும் எளிதில் அறியும்படி உபந்யாஸம் செய்தார். ஸுமார் ஐம்பது ஸ்வாமிகள் கேட்டு ஆநந்தித்து, இந்த உபந்யாஸத்தை நடத்திவைக்கும் தேசபக்தி உள்ள ஸ்வாமிக்கு தங்களுடைய க்ருதஜ்ஞதையை தெரிவித்திருக்கிறார்கள்.

கார்யதர்சி.

ஸ்ரீ:

## திருக்குடந்தை ஸ்ரீவிசிஷ்டாத்வைத மத ராமாநுஜ ஸித்தாந்த ஸபையின் 32 வது வார்ஷிகோத்ஸவம்.

இந்த ஸபையானது காலஞ்சென்ற மஹநீயரான திருக்குடந்தை விராகக்குளம் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியால் ஏற்படுத்தப்பட்டு அவராலும் பிறகு அவர் குமாரர்களாலும் சென்ற 32-ஸம்வத்ஸரங்களாக வெகு சிரத்தையுடன் நடத்தப்பட்டு வருகிறது. நாளது ரக்தாக்ஷி௵ புரட்டாசிமீ த்தில் ஸ்ரீஆராவமுதன் ஸந்நிதியில் நடந்த ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில் வழக்கம்போல் 4-வது உத்ஸவம் முதல் ஸபை நடைபெற்றது. ஸ்ரீபாஷ்யம், ரஹஸ்யத்ரயஸாரம், பகவத்விஷயம், ஸங்கல்ப ஸூர்யோதயம் முதலிய க்ரந்தங்களிலும் யஜுர் வேதத்திலும் பரீக்ஷைகள் நடந்தன. அநேக வித்வான்களும், வித்யார்த்திகளும் பரீக்ஷையில் அந்வயித்தார்கள். அடியில் கண்ட விபரப்படி வித்வான்களால் உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. கடைசி தினம் திவான்பஹதூர் ஸ்ரீ. உ. வே. வி. கே. ராமாநுஜாசார்யர் ஸ்வாமி அக்ராஸநம் வஹித்து ஸபையின் அபிவ்ருத்தியையும் நமது மத ஸித்தாந்தாபிவ்ருத்தியையும் பற்றி சில அபிப்ராயங்களைச் சொல்லி வந்திருந்த வித்வான்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் ஸம்பாவனைகளைக் கொடுத்தார்.

உபந்யாஸங்கள்.

1. 14-10-24 கொட்டையூர் ஸ்ரீ. உ. வே. சேஷாத்ரியாசார்யர் ஸ்வாமி,
மோக்ஷஸ்வரூப நிரூபணம்.

2. 15-10-24 இல்லைபம்பூர் ஸ்ரீ. உ. வே. வெங்கடாசார்யர் ஸ்வாமி,
ஸங்கல்ப ஸூர்யோதயம்.

3. 16-10-24 ராயம்பேட்டை ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி,
விசிஷ்டாத்வைதம்.

4. 17-10-24 ஸ்ரீ. உ. வே. அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசார்யர் ஸ்வாமி,
ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரம்.

5. 18-10-24 இஞ்சிமேடு ஸ்ரீ. உ. வே. ரங்கநாதாசார்யர் ஸ்வாமி,
வேதாந்த வித்யாப்ரசம்ஸை.

ஸ்ரீ:

# சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வார்ஷிக மஹாஸங்கம், மதுரை வரவேற்பு ஸபை.

அத்யக்ஷர்:—ஸ்ரீமான் V. பாஷ்யமய்யங்கார் ஸ்வாமி, ஸப்-ஜட்ஜ்
காரியநிர்வாகஸபை: அராக்ஸனர்:-ஸ்ரீமான் கே. ராமய்யங்கார்ஸ்வாமி. M.L.A

உப-அக்ராஸனர்கள்:—ஸ்ரீமான்கள்

T. C. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமி.
T. S. ராமஸ்வாமிஐய்யங்கார்ஸ்வாமி.
K. சடகோபராமானுஜாசாரியர்ஸ்வாமி.
P. B. ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமி.
திரு. நாராயணய்யங்கார்ஸ்வாமி.
M. வெங்குராயுடுகாரு.

கார்யதர்சிகள்:—ஸ்ரீமான்கள்

R. நரசிம்மய்யங்கார்ஸ்வாமி
R. க்ருஷ்ணஸ்வாமி ஐய்யங்கார் ஸ்வாமி.
N. R. க்ருஷ்ணஸ்வாமிஐய்யங்கார்ஸ்வாமி.
A. அரங்கராமானுஜதாஸர்.

இந்த மஹாஸங்கம் இந்த டிசம்பர்மீ 29, 30, 31உகளில் மதுரையில் ஸேதுபதி ஹைஸ்கூலில் பகவத் க்ருபையை முன்னிட்டு நடைபெறும்.

மெம்பர்களுக்கு ஆஹ்வான பத்ரிகை இந்த தீபிகையில் வைத்து அனுப்பப்பட்டிருக்கிறது. ப்ரத்யேகமாக அனுப்புவதில் தபால் சார்ஜ் ஏராளமாக ஆய்விடுமாதலால் இவ்விதம் செய்யப்பட்டதை மெம்பர்களனைவரும் க்ஷமித்தருளவேணும். தினசரிக்ரமம் இந்த தீபிகையில் அச்சிடப்பட்டிருக்கிறது.

விசேஷ ஸௌகர்யம் வேணுமென்று அபேக்ஷை உள்ளவர்கள் மதுரை ஸத்கார ஸபை கார்யதர்சிகளில் ஒருவராகிய ஸ்ரீ. உ. வே. N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, வடக்கு வெளி வீதி, மதுரை என்கிற விலாஸத்திற்கு எழுதிக்கொள்ளவேணும்.

புரசைவாக்கம்
20-12-1924.

ர. ஸ்ரீநிவாஸராகவன்,
கார்யதர்சி.

## முமுக்ஷுப்படி.

இது ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸாதித்த வ்யாக்யானத்துடன்கூடின ஸ்ரீபிள்ளைலோகாசார்யரால் திருவாய் மலர்ந்தருளிய முமுக்ஷுப்படி என்னும் க்ரந்தத்தில் சில விசேஷ அம்சங்களை எல்லோரும் அறியும்பொருட்டு இங்கிலீஷில் ஸ்ரீ. உ, வே. வ. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியால் எழுதப்பட்ட ஒரு சிறு புஸ்தகம். இந்த புஸ்தகத்தை வாசித்தால் மேல் குறித்த க்ரந்தத்தை படிக்க வேணுமென்ற ஆவல் ஜனங்களுக்கு உண்டாகவேண்டுமென்று இந்த ஸ்வாமியால் எழுதப்பட்டுள்ளது. இது சென்னை, மிண்ட் பில்டிங்க்ஸ், எஸ். ராதா அண்டுகம்பனியாரால் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6. வேண்டுவோர் அந்தக் கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.